பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 30, வெள்ளிக்கிழமை 15.09.2017 கதிர் 313


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# 20ஆவது திருத்தம் 'அவுட்'!

பிரத்தியேக செய்தி

## சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் எனத் தீர்ப்பு

### சபாநாயகர், ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் நேற்று அறிவிப்பு

- என்.வித்தியாதரன் -

கொழும்பு, செப்ரெம்பர் 15

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலைகளை ஒரேநாளில் நடத்துவதற்கு வழி செய்யும் விதத்தில் அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ள இருபதாவது திருத்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதாயின் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவுடனும், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களின் அனுமதியுடனுமே அதனைச் செய்ய முடியும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது என நம்பகரமாக அறிய வருகின்றது.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், சபாநாயகர் கருஜெயசூரியவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டதாக உயர்நீதி மன்ற வட்டாரங்கள் மூலம் அறியவந்தது.

பக்கம் 18 »

## இருபதாவது திருத்தம் கைவிடுவதைத் தவிர அரசுக்கு வழியில்லை!

கொழும்பு,செப்.15

நல்லாட்சி அரசு கொண்டு வந்த இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதாயின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியைப் பெறவேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டால், இனிமேல் அந்தத் திருத்தத்தைக் கைவிடுவதைத் தவிர அரசுக்கு வேறு மார்க்கமில்லை எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் எதிர்பார்ப்புக்கு மாறாக உயர்நீதிமன்றத்

பக்கம் 18 »

★ கிழக்கு ★ சப்ரகமுவ ★ வடமேல்

## 3 மாகாண சபைத் தேர்தல்களுக்கும் 3 வாரங்களுக்குள் அறிவிப்பு வரும்

இருபதாவது அரசமைப்புத் திருத்த முயற்சிகளில் அரசுக்குப் பின்னடைவு நிலைமை ஏற்பட்டிருப்பதால் – கிழக்கு மாகாணசபை, சப்ரகமுவ மாகாண சபை, வடமேல் மாகாண சபை ஆகியவற்றின் தற்போதைய பதவிக்காலம் இம்மாத இறுதியிலும், அடுத்த மாதம் முதல் திகதிகளிலும் காலவதியாகின்றமையை இனித் தடுக்க முடியாது

பக்கம் 18 »

பல்கலை மாணவர் மீதான சூடு:

## கடுமையான நிபந்தனைகளுடன் ஐந்து பொலிஸாருக்கும் பிணை

யாழ்ப்பாணம்,செப்.15

யாழ். பல்கலைகழக மாணவர்கள் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 5 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட்டுஉள்ளது.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் சந்தேக

பக்கம் 18 »

## செவ்வாயன்று உத்தியோகபூர்வ தீர்ப்பு அறிவிப்பு

இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு எதிர்வரும் 19ஆம் திகதி (செவ்வாய்க் கிழமை) சபாநாயகரினால் நாடாளுமன்றத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனக் கூறப்பட்டது. (உ)

## தரப்பட்ட 20ஆவது திருத்த வடிவத்தை ஆதரிக்க முடியாது என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம்,செப்.15

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்தை – எமக்குத் தரப்பட்ட – இப்போதைய – வடிவத்தில் ஆதரிக்க நாங்கள் தயாரில்லை. அதில் திருத்தங்கள் செய்யப்பட்டால் பரிசீலிக்கத் தயார் என்பதே எங்கள் உறுதியான நிலைப்பாடு எனக் கூறியிருக்கும்

பக்கம் 18 »

## மாகாண சபைகளின் அதிகாரங்களை 20ஆவது திருத்தம் பாதிக்கும் என்பது தவறு

### வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம்,செப்.15

அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தச்சட்டம் மாகாண சபைகளின் அதிகாரங்களை ஒருபோதும் பாதிக்காது என கூறியிருக்கும் வடமாகாண சபை எதிர்கட்சி தலைவர் சி.தவராசா, மேற்படி திருத்தச்சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அதற்காக 20

பக்கம் 18 »

## தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீரித்தே உயர்நீதிமன்று தீர்ப்பு

### யாழ். பல்கலை சட்டத்துறையின் கலந்தாய்வில் சுமந்திரன் விவரிப்பு



யாழ்ப்பாணம்,செப்ரெம்பர் 15

அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீரிக்கும் விதத்திலான தீர்ப்பு ஒன்றையே உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அந்த விடயங்களைத் தெளிவுபடுத்தி விளக்கினார்.

யாழ்.பல்லைக்கழக சட்டபீடத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயத்தை விவரித்து விளக்கமளித்தார் தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ. சுமந்திரன் .

பக்கம் 18 »

## 'நீர்க் காகம்' போர்ப் பயிற்சியை செய்மதி மூலம் பார்த்தார் மைத்திரி

கொழும்பு,செப்.15

திருகோணமலை குச்சவெளிப்பிரதேசத்தில் கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும் கூட்டு நடவடிக்கையான 'நீர்க்காகம் –2017' போர்ப் பயிற்சி நடவடிக்கைகளை கொழும்பில் உள்ள தனது உத்தி

பக்கம் 18 »

இலங்கை அரசின் செயலின்மைக்கு எதிரான

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் கண்டனத்தை வரவேற்கிறது கூட்டமைப்பு

கொழும்பு,செப்.15

இலங்கை அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்கும்வகையில், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது. இனியும் விதண்டாவாதக் கதைகளைப் பேசிக் கொண்டிருக்காமல், ஐ.நா.

பக்கம் 18 »

# கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு சிவசக்தி ஆனந்தன் அவசரக் கடிதம்!

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை கூட்டுமாறு, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு நாடா ளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவசர கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

அந்தக் கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளவைவருமாறு:-

நாடாளுமன்ற குழுக்கூட் டம் தொடர்பான உங்களது அறி வித்தல் கடிதம் கிடைத் தது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பாகவும், வழிநடத்தல் குழுவின் இடைக் கால அறிக்கை தொடர்பாகவும் விவாதிக்க உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு புதிய அரசியல் யாப்பு வரவிருக்கின்ற சூழலில் தேர்தல் சீர்திருத்தம் தொடா பில் 20ஆவது திருத்தம் மற் றும் வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை ஆகி யவை கொள்கை முடிவுடன் தொடர்புபட்டுள்ளது.

இதனால், நாடாளுமன்ற குழுக்கூட்டத்தை கூட் டுவ



## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டுமாறு

தற்கு முன்பாக ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டத் தைக் கூட்டி அங்கத்துவக் கட்சிகளின் கருத்தறிந்து அதற் கேற்ப முடிவெடுப்பதே சிறப் பானதாக இருக்கும்.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட் டத்தில் எட்டப்படுகின்ற முடி வுகளுக்கேற்ப நாடாளுமன்ற குழுவைக் கூட்டி அனை வரும் ஒரு நிலைப்பாட்டிற்கு வருவதே சரியானதாகவும் சிறந்த ஜனநாயக செயல் முறையாகவும் இருக்கும்.

ஆகவே, தாங்கள் விரைவாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டத்தை கூட்டுமாறு ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி கோருகிறது. எமது கோரிக் கையை ஏற்று செயற்படுவீர் கள் என்று எதிர்பார்க்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடிதத்தின் பிரதிகள் பங்காளிக்கட்சித் தலைவர்களான மாவை சேனா திராசா, செல்வம் அடைக் கல நாதன், த.சித்தார்த்தன் ஆகி யோருக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (க-100)

## அபிவிருத்தி லொத்தர் சபைக்கு புதிய தலைவர் நியமனம்!

கொழும்பு, செப். 15

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக எஸ்.ஏ. பி.சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய, நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவால் இந்த நியமனம் வழங்க ப்பட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக செயற்பட்ட ரொமேஷ் ஜயவர்தன உள்ளிட்ட பணிப்பாளர் சபை கடந்த 31 ஆம் திகதி நிதி அமைச்சர் மங்கள சமவீரவால் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர். இந்த நிலையிலேயே, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக எஸ்.ஏ.பி.சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

## திண்மக் கழிவகற்றல் வழக்கு 27ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!

கடந்த சில வாரங்களாக மட்டக்களப்பில் ஏற்பட் டுள்ளதிண்மக் கழிவகற்றல் பிரச்சினை தொடர்பான வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது. இந்த வழக்கானது நேற்று மட் டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி மா. கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே வழக்கு மேலும் 14 நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது பல்கலை ஊழியர் சங்க புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பித்த பணிப்புறக் கணிப்பு போராட்டம் தற்காலி கமாக கைவிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் பெண் ஊழியரொருவருடன் இரு நிர் வாக அதிகாரிகள் தகாத முறை யில் நடந்துள்ளனர் எனத் தெரி வித்தும், அவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வலியுறுத் தியும் இந்தப் போராட்டம் நடத் தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் முற்பகல் ஒன்று கூடிய பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பொதுச் சபை தற்காலிகமாக பணிப்புறக்கணிப்பு போராட் டத்தைக் கைவிடுவதென ஏக மனதாக முடிவெடுத்துள்ளது.

இது தொடர்பில் யாழ். பல்க லைக்கழக ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர்களில் ஒரு



வரான த.சிவரூபன் தெரிவித் தவை வருமாறு:-

எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறும் பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தின் போது இந்தப் பிரச்சினைக்குத் தீர்க்க மான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். இல்லாவிடில் தொடா போராட்டத்தில் ஈடுபடுவதென இந்தக் கூட்டத்தின் போது தீர் மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,இந்தத் தீர்மானத் திற்கு அமைய தமது பணிப்புறக் கணிப்பு போராட் டம் நேற்றுப் பிற்பகல் முதல் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# மன்னாரில் யாகப்பர் சொரூபம் விஷமிகளால் உடைப்பு!

மன்னார் - சிறுநீலாசேனை கிராமத்திலுள்ள புனித யாகப் பர் ஆலயத்திற்கு சொந்தமான 'புனித யாகப்பர் திருச்சொரூ பம்' அடையாளம் தெரியா தோரால் உடைத்துச் சேதமாக் கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற் றுள்ளது என புனித யாகப்பர் ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, நொச்சிக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த திருச் சொரூபமே இவ்வாறு சேத மாக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒன்றரை அடி உயரம் கொண்ட புனித யாகப்பர் திருச்சொரூபம் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட் டிருந்தது.

இந்த நிலையில், நேற்று





முன்தினம் அந்தப் பகுதிக்கு வந்த இனம் தெரியாத நபர்கள் கண்ணாடிப் பெட்டியை உடைத்து உள்ளே இருந்த புனித யாகப்பர் திருச்சொரூ பத்தை சேதப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக புனித யாகப்பர் ஆலய நிர்வாக சபையினர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசா ரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதேவேளை, மன்னாரில் மீண்டும் ஒரு திருச் சொரூபம் நேற்று அதிகாலை விஷமிக ளால் உடைத்து சேதப்படுத் தப்பட்டுள்ளது என பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி நாயாற்றுவெளி பகுதியில் வீதிக்கு அருகில் கண்ணாடிப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த புனித அந்தோனியார் திருச் சொ ரூ பமே இவ்வாறு உடைக்கப் பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு ஆக்காட்டி வெளி பங்குத்தந்தை அருட் தந்தை டெஸ்மன் அஞ்சலோ அவர்களால்அடம்பன்பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த பகுதிக்கு வந்த விஷமி கள் கண்ணாடிப்பெட்டியை உடைத்து உள்ளே இருந்த புனித அந்தோனியாரின் திருச் சொரூபத்தை வெளியில் எடுத்து உடைத்து சேதப்படுத் தியுள்ளனர்.

முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலி ஸார் உடைத்து சேதமாக்கப் பட்ட அந்தோனியார் சொரூ பத்தைப் பார்வையிட்டதோடு, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யோஷிதவிடம் விசாரணை

முன்னாள் மஹிந்தராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வர் யோஷிதராஜபக்ஷகாணிக்கொள்வனவுதொடர்பானவிசாரணைக்காக நேற்று நிதி குற்றவியல் பொலிஸ் பிரிவுக்கு சமுகம் தந்தார்.

## விபத்தில் காலை இழந்த இளைஞன்

அச்சுவேலி வளலாய் பகுதியில் நேற்றுமுன்தினம் மதியம் சொகுசு கார் ஒன்றுடன், மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனின் கால் பாதம் துண்டிக்கப்பட்டது. வளலாய் பகுதியில் இருந்து இடைக்காடு பகுதி நோக்கி வந்து கொண்டிருந்த கார் மீது தம்பாலை பகுதியில் இருந்துவளலாய் நோக்கிசென்ற மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றது.

சக்கோட்டை பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த தேவராஜா கிஷோத்குமார் (வயது 26) என்ற நபரே கால்பாதம் துண்டிக்கப்பட்ட நிலையில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# முதல்வரின் சமரசக் கூட்டத்தை பகிஷ்கரித்தது இ.போ.ச. தரப்பு!

வடமாகாண தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும்இ.போ.ச. பேருந்து சாரதிகள், நடத்துநர்களுக்கும் இடையில் நடக்கும் பிணக்குகளை தீர்த்து வைக்கும் நோக்கில் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் நேற்று இரு தரப்பினருக்குமிடையிலான சந்திப்பு ஒன்றை ஒழுங்கமைத்திருந்த நிலையில், இ.போ.ச. பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்வதைத் தவிர்த்திருக்கின்றனர்.

வடமாகாணதனியார்பேருந்து உரிமையாளர்களுக்கும்இ.போ.ச பேருந்து சாரதிகள், நடத்துநர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக பல்வேறு பிணக்குகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் நேற்றுக் காலை 11.30 மணிக்கு வட மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் இரு தரப்பினருக்குமிடையிலான சந்திப்பு ஒன்றை வடமாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் ஒழுங்கமைத்திருந்தார். மேற்படி சந்திப்பில் தனியே வடமாகாண தனியார் பேருந்து உரிமையாளர்கள் மட்டுமே கலந்து கொண்டிருந்த நிலையில் இ.போ.ச. சாரதிகள், நடத்துநர்கள் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் சந்திப்பின் நிறைவில் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்–

தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்களுக்கும் இ.போ.ச. சாரதிகள், நடத்துநர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக பல்வேறு பிணக்குகள் உருவாகி வருகின்றன. இது தொடர்பாக இரு தரப்பையும் ஒரு சந்திப்புக்கு அழைத்திருந்தோம். எனினும் இ.போ.ச சாரதிகள், நடத்துநர்கள் மேற்படி சந்திப்பில் கலந்து கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் வடமாகாண தனியார்பேருந்து உரிமையாளர்கள் மற்றும் தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு தங்கள் பிரச்சினைகள் தொடர்பாக சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். மேலும் தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்களுக்கும் இ.போ.ச சாரதிகள் நடத்துநர்களுக்கும் இடையில் உருவாகியிருக்கும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான சில யோசனைகள் என்னிடம் இருந்தன. அவற்றைக்கூறி இந்த பிணக்குகளை நிரந்தரமாக தீர்ப்பதற்கு எண்ணியிருந்தபோது இ.போ.ச. சாரதிகள், நடத்துநர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருக்கவில்லை என முதலமைச்சர் கூறினார்.

## நல்லூரில் தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபி அலங்கரிப்பு




யாழ்ப்பாணம், செப்.15

தியாகதீபம் திலீபன் (இராசையா பார்த்தீபன்) உண்ணாநோன்பை ஆரம்பித்து முப்பதாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அதனை நினைவு கூரும் ஏற்பாடாக நல்லூரிலுள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபியில் துப்புரவுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. நினைவு நிகழ்விற்கான ஏற்பாட்டை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் முன்னெடுத்துள்ளனர்.

தூபி மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்துணிகளினால் அலங்கரிங்கப்பட்டுள்ளது.

### மயானங்களை அகற்றக் கோரி நடந்துவரும்

# சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவு தெரிவித்து இன்று யாழ். செயலகம் முன் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 15


மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்றக் கோரி, தொடர்ந்து 65 நாள்களாகச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்திவரும் மக்களுக்கு உரிய தீர்வை வழங்க வேண்டும் என வலியுறுத்தி –

அவர்களுக்கு ஆதரவாக இன்று முற்பகல் 10 மணிக்கு, யாழ். செயலகத்துக்கு முன்னால் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கவனவீர்ப்புப் போராட்டம்ஒன்றைஏற்பாடுசெய்துள்ளது.

“வடக்கு மாகாண சபையே! மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்று; மக்களின் வாழ்விடச் சூழலைப் பாதுகாத்து, கிராமியக் கட்டமைப்பை வலுப்படுத்து” என்ற கோரிக்கையை முன்வைத்து இந்தப் போராட்டம் புத்தூர் மேற்கு, கலைமதி கிராம மக்கள் மண்டபத்திற்கு முன்னால் நடந்து வருகிறது.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் அமைந்துள்ள மயானங்களால் பல்வேறு சுற்றுச்சூழல், சுகாதார மற்றும் உளவியற் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மக்களும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும் ஏனைய அமைப்புகளுடனும் இணைந்து முன்னெடுக்கவுள்ள இக் கவனவீர்ப்புக்கு ஆதரவு வழங்குமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அனைத்து அரசியல்கட்சிகள், சமூகஅமைப்புகள், தொழிற் சங்கங்கள், வர்த்தகர்சங்கங்கள், இளைஞர் அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், மாணவர் அமைப்புகள்சமூக ஆர்வலர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுத்துள்ளது. (இ

## பாலகிருஷ்ணன் நினைவு நிகழ்வு



யாழ்ப்பாணம், செப். 15

ஐ.நா. அகதிகளுக்கான தூதரகத்தின் முன்னாள் பணியாளரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவருமான அமரர் பொன்னுத்துரை பாலகிருஷ்ணனின் ஞாபகார்த்த நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்ப்பாணம், நாவலர் வீதி, தியாகி அறக்கொடை நிலையத்தின் (TCT Hall) சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மனித நேய அமைப்புகள் ஒழுங்கமைத்து நடத்தும் இந்த நிகழ்வில் 'மனித நேய வேர்கள்' என்ற தலைப்பில் ஞாபகார்த்த நினைவுப் பேருரை இடம் பெறும். (உ)

## அரிச்சுவடி ஏடு அன்பளிப்பு

விஜயதசமியை முன்னிட்டு பனை ஓலைச் சுவடி ஏடுகளையும் சரஸ்வதி சகலகலாவல்லி பாமாலைப் புத்தகத்தையும் சகல ஆலயங்களும், பாடசாலைகளும் கே.கே.எஸ். வீதியில் உள்ள மில்க்வைற் சோப் தொழிற்சாலையில் பெற்றுக்கொள்ளலாம், எனத் தொழிலதிபர் சிவநேயர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார். (இ

## ஸ்கந்தவரோதயன்களின் சங்கமும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை

சுன்னாகம், செப்.15

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் ஸ்கந்தவரோதயன்களின் சங்கமும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இரவு விருந்துபசாரமும் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (இ

## யாழ்.அஞ்சனந்தாழ்வு தூய ஆரோக்கிய அன்னையின் யூபிலி விழா

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.கஸ்தூரியார் வீதி, அஞ்சனந்தாழ்வு தூய ஆரோக்கிய அன்னையின் (கொலை விலக்கி அன்னை) ஆலய யூபிலி விழா கொடியேறிநடைபெற்றுவருகிறது.

நற்கருணை விழா நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

நாளைமறுதினம் ஞாயிறு காலை 6.30 மணிக்கு யூபிலி விழாத் திருப்பலி யாழ். ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து அன்னையின் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

அன்னையின் ஆசீர்பெற அனைவரையும் பங்குத்தந்தையும் பங்குமக்களும் அன்புடன் அழைக்கின்றனர். (இ

## தமிழரின்....

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். நீதிமன்றத்திடம் போய்த்தான் அதற்குத் தீர்ப்புப் பெற்று வர வேண்டும் என்பதல்ல.

ஆனால், இந்தத் தீர்ப்புக்கு உள்ளே தமிழர்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமை குறித்து உயர்நீதிமன்றம் கருத்துப் பிரதிபலித்திருக்கின்றது. அதுதான் நோக்கப்பட வேண்டும்.

'சமஷ்டி' என்பது சமஸ்கிருத சொல் எனக் கருதிய இலங்கை தமிழரசுக் கட்சி தனது யாப்பில் அதற்கான சொற்பிரயோகத்தை தமிழுக்கு மாற்றியது.

நாம் 'இணைப்பாட்சி' என்ற சொல்லைப் பயன்படுத்தினோம். ஆனால் வழக்குத் தொடுத்த தரப்பு அதுவேதவறு என்று சுட்டிக்காட்டியது.

'சமஷ்டி' என்ற சொல்லுக்கு 'கூட்டாட்சி' என்று பயன்படுத்தினால்தப்பில்லை என்றும், அதற்குப் பதிலாக 'இணைப்பாட்சி' (CONFEDERATION) என்ற சொல்பயன்படுத்தப்படுகின்றமையால் அது பிரிந்து போவது குறித்துப் பேசுகின்றது என்றும் வாதிட்டனர்.

இதனால் 'இணைப்பாட்சி' என்ற தமிழ் சொல்லின் அர்த்தம் தொடர்பில் அரச கரும மொழியியல் ஆணைக்குழுவின் கருத்துக் கோரப்பட்டது.

'இணைப்பாட்சி' என்றால் 'சமஷ்டி'யே என்று ஆணைக்குழு குறிப்பிட்டதால் வழக்காளிகளின் அந்த வாதம் அடிபட்டுப் போய் விட்டது.

அடுத்து எமது கட்சி யாப்பில் தமிழரின் சுயநிர்ணய உரிமை குறித்துக் குறிப்பிடப்பட்டிருக்கின்றமையைச் சுட்டிக்காட்டி ஆகையினால் அது பிரிந்து போகும் பிரிவினையைக் குறிப்பதாக வழக்காளிகள் வாதிட்டனர்.

அத்தோடு இறைமை குறித்தும் பேசப்பட்டது. அது பகிரப்பட முடியாதது என வழக்காளிகள் வாதிட்டனர்.

நாங்கள் ஒரு மக்கள் கூட்டம் என்ற முறையில் எங்களுக்கு சுயநிர்ணயம் உண்டு என்பதையும், சுயநிர்ணய உரிமை உள்ளகம், வெளியகம் என்ற இரண்டு அம்சங்களைக்கொண்டது என்பதையும் அதில் உள்ளக சுயநிர்ணய உரிமையையே நாங்கள் கோருகின்றோம் என்பதையும் நாம் சுட்டிக் காட்டி வாதிட்டோம். அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வை நாம் கோருகின்றமையைத் தற்போதைய அரசமைப்பின் 6 ஆவது திருத்தம் மூலம் தடைசெய்யப்பட்ட பிரிவினை நடவடிக்கையாகக் கொள்ள முடியாது என உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

'இலங்கை வாழ் தமிழர்களாகிய நாங்கள் ஒரு மக்கள் கூட்டம் என்ற வகையில் சர்வதேசச் சட்டங்களுக்கு அமைவாக எமக்குள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், பகிரப்பட்ட இறைமையின் ஒரு பிரதிபலிப்பாக, சமஷ்டி ஆட்சி முறையைக் கோருகின்றமையைத் தற்போதைய அரசமைப்பின் 6 ஆவது திருத்தத்தின் உட்பொருளான பிரிவினையைத்தடைசெய்யும்நடவடிக்கையின்கீழ் ஒரு தவறாகக் கொள்ள முடியாது' – என்ற வாதத்தை உயர்நீதிமன்றம் அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளது.

இதன்மூலம் இந்த ஒற்றையாட்சி முறையை வலியுறுத்துகின்ற அரசமைப்பினாலும் – அந்த அரசமைப்புக்குக் கட்டுப்பட்டு, அதன் வழி செயற்பட்டு, அதனை வியாக்கியானப்படுத்தும் உயர்நீதிமன்றத்தினாலும் –

ஒற்றையாட்சிக்கு வெளியே வந்து சமஷ்டி முறையிலான ஒருதீர்வைஎங்களதுசுயநிர்ணய உரிமை மற்றும் பகிரப்பட்ட இறைமை ஆகியவற்றின் அடிப்படையில் நாம் கோருகின்றமையைச் சட்ட ரீதியாகத் தடுக்க முடியாது என்பது தெளிவாகியிருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சமஷ்டி ஆட்சிமுறையைக் கோருவது 'பிரிவினைவாதம்' என்று அறிவிக்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் சமஷ்டிக் கோரிக்கை, இந்த அரசமைப்பின் கீழ் பிரிவினையாக அர்த்தப்படுத்தப்பட முடியாதது என்ற தீர்ப்பை நீதிமன்றம் வழங்கினாலும் –

சமஷ்டி என்பது பிரிவினை அல்ல என்பதே நீதிமன்றத் தீர்ப்பு எனினும் –

எமது சுயநிர்ணய உரிமைக்கான நீதிமன்ற அங்கீகாரமே இவ் வழக்கில் பிரதான உட்பொருளும், பேசுபொருளுமாகும்.–என்றார் அவர். (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பாதுகாப்புக்கு அதிக நிதி

ஓர் அரசாங்கத்தின் கொள்கைப் போக்கைப் பிரதிபலிக்கக் கூடிய முக்கிய அம்சங்களில் ஒன்று அதன் வரவு - செலவுத் திட்டம் எனலாம்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பர். ஓர் அரசாங்கத்தின் செயற்போக்குப் பண்பியல்பு அதன் வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் பிரதிபலிக்கும்.

கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது அரசின் கொள்கைப் போக்காக இருக்குமானால் வரவு - செலவுத் திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீடு அதிகரித்துக் காணப்படும்.

அதேபோன்று மக்களின் சுகவாழ்வு குறித்து சிந்திக்கும் அரசு வைத்தியத்துறைக்கும் அதனோடிணைந்த விவகாரங்களுக்கும் கரிசனை மிக்க அளவுக்கு நிதி ஒதுக்கீட்டைச் செய்யும்.

உள்கட்டுமாணங்கள், வீதிப் போக்குவரத்து போன்றவை ஊடாக நாட்டின் பொருளாதார மேம்பாட்டை இலக்கு வைக்கும் ஆட்சியாளர்கள் அத்துறைக்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்வர்.

அது போலவே இந்த நல்லாட்சி அரசின் சீத்துவம் என்னவென்பதை அதன் இப்போதைய மூன்றாவது வரவு - செலவுத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டு விவரங்கள் அம்பலப்படுத்தியிருக்கின்றன.

நல்லிணக்கம், புரிந்துணர்வு, அமைதித் தீர்வு, சமாதான வாழ்வு என்ற கோஷங்களை முன்வைத்து, சிறுபான்மையினரையும் வளைத்துப் போட்டு அதிகாரத்துக்கு வந்த இந்த 'நல்லாட்சி' அரசும் முந்திய ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு வேறானதல்ல என்பதை அடுத்த வரவு - செலவுத் திட்டத்துக்கான அந்த அரசின் நிதி ஒதுக்கீட்டு விவரங்கள் அம்பலப்படுத்தியிருக்கின்றன.

அந்த அரசின் 2018ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டின்படி, மொத்தச் செலவினம் 3 லட்சத்து 98 ஆயிரத்து 200 கோடி ரூபா. அதாவது சுமார் 4 லட்சம் கோடி ரூபா.

அதில் ஆகக் கூடிய ஒதுக்கீடு எந்த அமைச்சுக்குத் தெரியுமா? - அது பாதுகாப்பு அமைச்சுக்குத்தான். அதற்கு 15 ஆயிரத்து 883 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இது இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றுக்கான வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக்கு மேலதிகமான ஒதுக்கீடு. அதாவது முப்படைகளுக்குமான வழமையான செலவினத்துக்குப் புறம்பான ஒதுக்கீடு உண்டு. அது தவிர்ந்து, பாதுகாப்பு அமைச்சுக்கான செலவினமே 15 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை.

தமிழர்களைக் கொன்றொழிக்கும் யுத்தத்துக்காக முன்னைய ராஜபக்ஷ அரசுக்கள் நிதியை அதற்குக் கொட்டித் தீர்த்தன. யுத்தம் முடிந்த பின்னரும் - யுத்த காலத்தில் செலவிட்டமையை விட அதிகமான தொகையை பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்து திருகுதாளம் பண்ணியது அந்த அரசுகள்.

அதை அப்போது தவறு என விமர்சித்து எள்ளி நகையாடியவர்கள் அதே பாணியை இப்போதும் பின்பற்றுவதுதான் வேதனைக்குரியது.

அப்போதாவது, யுத்தத்தின் பின்னரும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதியை ராஜபக்ஷக்கள் ஒதுக்கீடு செய்தமையை நியாயப்படுத்த ஒரு நொண்டிச் சாட்டுக் காரணம் இருந்தது.

'யுத்தத்தின் வெற்றியை நிரந்தரமாக நிலை நிறுத்துவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை - ஒழுங்குகளை - நாம் ஸ்தாபித்து, நிலை நிறுத்த வேண்டியிருக்கின்றது. அதற்காக நிதி செலவிட வேண்டிய தேவை உள்ளது.' - என்று ஒரு காரணம் கூறப்பட்டது.

இப்போது, யுத்தம் முடிந்து எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன. இன்னொரு யுத்தத்துக்கான வாய்ப்பே ஏற்படாத வகையில் இனப் பூசல்களுக்கும், முரண்பாடுகளுக்கும், வேற்றுமைகளுக்கும் நிரந்தரத் தீர்வு கண்டு, சமாதான ஸ்திர நிலையை எட்டும் தந்திரோபாயத்தை முன்னெடுக்கிறோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்களும், அதைச் செய்வதை விடுத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் மூலம் - அடக்கு முறைத் தந்திரோபாயம் வாயிலாக - காரியத்தைச் சாதிப்பதைத்தான் தங்களது உட்திட்டமாக வைத்திருக்கின்றார்கள் போலும்.

அதனால்தான் சமாதான, சகவாழ்வுக்குரிய அடிப்படை விருத்திகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வதை விடுத்து பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதியை ஒதுக்குகின்றார்கள்.

கேட்டால், முன்னைய அரசுகள் கணக்கு வழக்கின்றி யுத்தத்துக்காகச் செலவிட வாங்கிய கடன்களை அடைக்கவே இத்தனை ஒதுக்கீடு என்று ஒரு சாட்டை முன்வைப்பார்கள்.

இங்கு இராணுவம் தனது பாதுகாப்புப் பணி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக தோட்டம் செய்கிறது; காய்கறி உற்பத்தி செய்து விற்கிறது; வர்த்தகம் நடத்துகின்றது; ஹோட்டல் பேணுகின்றது, விமானப்படை விமான, ஹெலிக்கொப்டர் பயணச் சேவை நடத்துகின்றது.

வர்த்தகத்துக்குள்ளும் தலைநீட்டும் படையினரைக் கொண்டுள்ள இலங்கையில்தான் அரசியலுக்குள்ளும் பாதுகாப்புத் துறை தலையிடும் ஆபத்து இப்போது அதிகமாகி வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் பாதுகாப்பு அமைச்சுக்குத் தொடர்ந்தும் அதிக நிதி ஒதுக்கீடு என்பது அமைதிச் சூழலுக்கு உகந்த ஏற்பாடாகத் தெரியவில்லை.

# மலையகத்தில் சீரற்ற கால நிலை!

கொழும்பு, செப். 15

மலையகத்தில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக அதிகாலை வேளைகளில் கடும்பனி பொழிவுடன், பொது மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சாரதிகளை அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாலை வேளைகளில், பலத்த காற்று, இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளதால், பொதுமக்களை அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஊவா மாகாணத்தில் பனியுடன் கூடிய கால நிலை நீடித்து வருவதாலும் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யுமென எதிர்வு கூறப்பட்டுள்ளதாலும் வெட்ட வெளி, மலை உச்சிகள் மற்றும் மலைப்பாங்கான இடங்களில் வேலை செய்பவர்கள் மாத்திரமன்றி மரங்களின் கீழ் நடமாடுபவர்களும் மிக அவதானமாக நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மண்சரிவு அபாயம் நிலவும் பகுதிகளில் வாழும் மக்களை அதிக மழை பெய்யுமிடத்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (க)

# அரசு தொடர்பில் நாமல் குற்றச்சாட்டு!



நாட்டின் அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், புதிய அரசு மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தமது அரசின் ஆட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களும் தற்போது ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என்றும் இந்த அரசு அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்துவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆசிரியருக்கு மணிவிழா வைபவம் சாவகச்சேரி தமிழ்க் கோட்டத்தில்!

## நாளை கம்பவாரிதியின் பட்டிமன்றம்

தென்மராட்சி, செப். 15

தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் தமிழ் ஆசானும், தென்மராட்சி இலக்கிய அணி உறுப்பினருமான ச.மார்க்கண்டு ஆசிரியரின் மணிவிழா வைபவம் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை தமிழ்க் கோட்ட மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

இந்த நிகழ்வில் மங்கல விளக்கை தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.ஸ்ரீகணேசன் தம்பதியர் ஏற்றி வைக்கவுள்ளனர். கடவுள் வாழ்த்தினை பா.விக்னேஸ்வரனும், ஆசியுரையை ஓய்வு நிலை அதிபர் மு.நாகேந்திரராஜாவும், வாழ்த்துரைகளை கலாநிதி ஆறு.திருமுருகன், ஓய்வு நிலை அதிபர் க.அருந்தவபாலன், விரிவுரையாளர் கலாநிதி செ.சேதுராஜா, டிறிபேர்க்கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மணி விழாவைத் தொடர்ந்து ''இன்றைய ஆசிரியத்தின் அவசியத் தேவை- ''அன்பா?, அறமா?'' எனும் தொனிப்பொருளில் கம்பவாரதி இ.ஜெயராஜ் தலைமையில் சிறப்பு பட்டிமன்றமும் இடம்பெற உள்ளது. பட்டிமன்றத்தில் 'ஆசிரியத்தின் அவசிய தேவை அன்பே' எனபேராசிரியர் வேல் நம்பி மற்றும் கவிஞர் நாகேஸ்வரனும், 'அறமே' என கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் மற்றும் அ.வாசுதேவாவும் வாதாட உள்ளனர்.

நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி இலக்கிய அணியினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-21)

# அகில இலங்கை சைவ மாநாடு மூன்றாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 15

சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ மாநாடு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் 55, கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

முதல்நாள் நிகழ்வுகள் தொடர்பாக நேற்று முன்தினமும் இரண்டாம்நாள் நிகழ்வுகள் தொடர்பாக நேற்றைய தினமும் இப் பத்தியில் பிரசுரித்திருந்தோம். மூன்றாம் நாள் நிகழ்வுகள் தொடர்பான விவரங்கள் இன்று தரப்படுகின்றன.

மூன்றாம் நாள் மாநாடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சைவபரிபாலனசபைத்தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் ஆரம்பமாகும்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் வழங்கும் திருமுறை ஓதலுடன் ஆரம்பமாகும் நிகழ்வுகளின் வரிசையில், ஆசியுரையை சித்தன்கேணி வீணாகான குருபீட குருமார் சுந்திதானசுந்திதாச்சாரியார் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்களும் வரவேற்புரையை பொ.கமலநாதனும், 'சமயமும் வாழ்வியலும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவை வர்ணனைக் கலாமணி தவனேசனும் வழங்குவர்.

சிறப்பு நிகழ்வாக சிந்தனை அரங்கு இடம்பெறும். 'மேன்மை கொள் சைவநீதி' என்னும் தலைப்பில் கம்பவாரிதி இ. ஜெயராஜும், 'மெய்ப்பொருள் காட்டிய நீதி' என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும், 'திருநாளைபோவார் காட்டிய நீதி' என்னும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தனும், 'திருநீலகண்டர் காட்டிய நீதி' என்னும் தலைப்பில் அகில இலங்கை கம்பன்கழக இளநிலை அமைப்பாளர் அ.வாசுதேவனும், 'சிறுத்தொண்டர்காட்டிய நீதி' என்னும் தலைப்பில் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேலும் வழங்குவர்.

கலைநிகழ்வாக திருமதி கவிதா வாமதேவனின் நெறியாள்கையில் 'விரலிசை காண' நிகழ்வு நடைபெறும். நன்றியுரையை சபைச் செயலாளர் வை.இரகுநாதமுதலியார் வழங்குவார்.

## நாளை

16.09.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : பூசம் பி.இ.2.13 வரை
திதி : ஏகாதசி பி.ப.4.53 வரை
சுபநேரம் : 03.03 – 04.33
இராகுகாலம் : 09.03 – 10.33

# இலங்கைக்கு உடனடியாக அழுத்தம் கொடுக்க வேண்டும்; வலியுறுத்துகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்!

கொழும்பு, செப். 15

கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறுகால நீதிக்கான தீர்மானத்தின் இலக்குகளை நிறைவேற்றுமாறு இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் உடனடியாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை விடயத்தில், பல்வேறு நல்லிணக்கப் பணியகங்களை அமைப்பதும், முன்னேற்றங்கள் பற்றிப் பேசுவதும், 2015 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இணையானது அல்ல, என்ற விடயத்தில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உள்ள அரசுகள், தெளிவாக இருக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் மீனாட்சிகங்குலி தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள், தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதைக் காண வேண்டிய தேவை உள்ளது. நீதி கிடைப்பதற்கான ஆதாரங்களை அவர்கள் காண வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பெருமளவில் தோல்வியடைந்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பாக மொழியால் பேசுவதை விட, அதிகமாகச் செய்ய முடியும் என்பதை இலங்கை அதிகாரிகள் வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சடலத்தை கொடுக்கச் சென்றவர் விபத்தில் பலி!

ஏ9 வீதியில் யாழ். கச்சேரிக்கு அருகில் உள்ள மதுபான சாலைக்கு முன்பாக நேற்று அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்தில் வாகன சாரதியான முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த 67 வயதான நவராசா என்ற முதியவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வானில் இறந்த ஒருவரின் சடலத்தை வவுனியாவிற்குக் கொண்டு சென்று கொடுத்துவிட்டு மீண்டும் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் மதிலுடன் வான் மோதி இந்தச் சாரதி காயமடைந்துள்ளார்.

இந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வேளையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

## முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் வான் பகுதியைப் புனரமைக்க கோரிக்கை!

முல்லைத்தீவு, செப். 15

முல்லைத்தீவு - அம்பலப் பெருமாள்குளம் வான் பகுதியைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



கடந்த 1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பலப் பெருமாள்குளம் குடியேற்றத் திட்டத்தில், குளத்தை நம்பி சுமார் 100 குடும்பங்கள் வாழும் நிலையில் துணுக்காய் பகுதிக்கும் அக்கராயனுக்கும் இடையில் பயணிக்கும் சகல வாகனங்களும் குளத்தின் வான் வழியாக பயணிப்பதன் காரணமாக வான்பகுதி சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்த நிலையில், நெற்செய்கைக் கூட்டங்களில் குறித்த வான்பகுதியைப் புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள போதிலும், சம்பந்தப்பட்ட திணைக்களமே வீதி புனரமைப்பின் போது குறித்த வான்பகுதியைப் புனரமைத்துத் தருவதாக உறுதியளித்துள்ளது என அதிகாரிகளால் தெரிவிக்கப்படுவதாகப் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கடந்த 7 ஆண்டுகளில் அந்த வான்பகுதியில் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ள அப்பகுதி மக்கள், சிலவேளைகளில் குளம் நிரம்பி வான் பாய்கின்றபோது வான்பகுதியில் உடைவுகள் ஏற்பட்டால் குளத்தில் இருந்து முற்றாக நீர் வெளியேறுகின்ற அபாயநிலை உருவாகும் எனவும், உடைந்த வான்பகுதியைப் புனரமைத்துத் தருமாறும் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பலப்பெருமாள் குளத்தில் பெரும்போகத்தில் 600 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

## விவசாயிகள் தற்கொலை தொடர்பில் விசாரணை!

கொழும்பு, செப். 15

தம்புள்ள வைத்தியசாலையில் விவசாயி ஒருவர் தற்கொலை செய்து கொண்டமை தொடர்பில் மரண விசாரணை ஒன்று இடம்பெற்றுள்ளது என மரண பரிசோதகர் டீ.டபிள்யூ.ஜே. பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் கடும் மழை காரணமாக பெரிய வெங்காய பயிர்கள் முழுவதுமாக அழிந்துள்ளதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அவர் தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப் பரப்பில் கடன்பட்டு பெரிய வெங்காயம் பயிரிடப்பட்டிருந்த நிலையில மழை காரணமாக அவை முற்று முழுதாக அழிந்தமையினால் அவர் தற்கொலை செய்து கொண்டார் என விசாரணையின் போது உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## சுற்றாடல் முன்னோடிகளுக்கு பதக்கம் வழங்கினார் ஜனாதிபதி!

சுற்றாடல் முன்னோடிகளுக்கு ஜனாதிபதி பதக்கம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

ஏழாவது தடவையாக இடம்பெற்ற பதக்கம் வழங்கும் நிகழ்வில் 9 மாவட்டங்களைச் சேர்ந்த 16 பாடசாலைகளிலிருந்து 40 சுற்றாடல் முன்னோடிகள் ஜனாதிபதியிடமிருந்து சுற்றாடல் முன்னோடி பதக்கங்களைப் பெற்றுக் கொண்டனர்.



அத்துடன், விசேட திறமையை வெளிப்படுத்திய பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்களும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

எதிர்கால பிரஜைகளை சுற்றாடல் நேயமிக்கவர்களாக சமூகத்தில் உருவாக்கி சுற்றாடல் மரபுரிமையை அடுத்த தலைமுறையினருக்கு வழங்கும் நோக்குடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, கல்வி அமைச்சுடன் இணைந்து தேசிய சுற்றாடல் முன்னோடி திட்டத்தை பாடசாலைகளில் அமுல்படுத்துகின்றது.

கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆகக்கூடுதலாக 73 ஜனாதிபதி பதக்கங்களைப் பெற்றவர்களை தாய் நாட்டுக்கு தந்த அம்பாந்தோட்டை, தங்காலை மகளிர் கல்லூரி மற்றும் இரண்டாவது கூடுதலான பதக்கங்களைப் பெற்ற குருணாகல் உடுபந்தலவ சுதர்சன மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கும் ஜனாதிபதியால் சிறப்பு பாராட்டு பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.



இந்த நிகழ்வில் மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் பிரதி அமைச்சர் அனுராத ஜயரத்ன, மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க, மத்திய சுற்றாடல் அதிகார சபை தலைவர் லால் மேர்வின் தர்மசிறி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பணம் கொடுக்கும் அரசியல் கலாசாரம் நாட்டில் இருந்து ஒழிக்கப்பட வேண்டும்!



### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி வலியுறுத்து

காத்தான்குடி, செப்.15

பணம் கொடுத்து அரசியல் செய்யும் கலாசாரம் இந்த நாட்டில் இருந்து முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். அரசியலை ஒரு சமூகப் பணியாகக் கருதிச் செயற்பட வேண்டும். மாறாக அரசியலை வியாபாரம் ஆக்கக் கூடாது.

-இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்தார்.

காத்தான்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காத்தான்குடியில் அண்மைக்காலமாக அரசியல் செய்யும் ஒரு சாரார் கூட்டத்தைக் கூட்டுவதற்காக 'உங்களுக்கு இராப்போசனம் வழங்கப்படும்' என அவர்களின் அழைப்பிதழ்களில் எழுதுகின்றனர். இவ்வாறு சாப்பாடு கொடுத்து , பணம் கொடுத்து அரசியல் செய்யக் கூடாது.

இதே போல லஞ்சம் பெற்று அரசியல் செய்பவர்களும் நாட்டில் அதிகரித்துள்ளனர்.

லஞ்சம் பெற்று அல்லது ஊழல் செய்து அரசியல் செய்யும் நிலைமை ஏற்படின் அரசியலில் இருந்து முற்றாக ஒதுங்கி விடவேண்டும்.

அரசியல்வாதிகள் தேர்தலுக்காக வீதிகளைப் போடுவதும், தேர்தலுக்காக அபிவிருத்திகளை மேற்கொள்கின்றமையும் நகைப்புக்குரியது.

மக்கள் பிரதிநிதிகள் பண்பாடு மிக்க ஒழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்கு வதற்காகப் பாடுபட வேண்டும். மக்களின் காலடிக்குச் சென்று அவர்களுடைய குறைகளைக் கேட்டு உதவி செய்ய வேண்டும். மக்களின் நன்மை கருதி அரசியல் செய்ய வேண்டும்.-என்றார். (ச)

கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட

## வவுணதீவு மக்களுக்கு நிவாரணம் வழங்கல்!



வவுணதீவு, செப்.15

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் உலர் உணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரைக்கு அமைவாக வவுணதீவுப் பிரதேசத்தின் 14 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள ஆயிரத்து 713 குடும்பங்களுக்கு இந்த நிவாரணங்கள் வழங்கப்பட்டன. இதில் அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருள்கள் முதல் கட்டமாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், மண்முனை மேற்கு - வவுணதீவு பிரதேச செயலாளர் எஸ். சுதாகர், பிரதி பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு, நிர்வாக உத்தியோகத்தர் எம்.கோமளேஸ்வரன், அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.சிவநிதி மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திருமதி எம்.விஜேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

## வீதி புனரமைப்பை வலியுறுத்தி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு,செப்.15

மட்டக்களப்பு மாமாங்கப் பிரதேச வீதியின் ஒரு பகுதி புனரமைக்கப்படாமையைக் கண்டித்து நேற்று வியாழக்கிழமை காலை பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, வீதிப் புனரமைப்பை மேற்கொள்ள வலியுறுத்தும் வகையிலான சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தி இருந்தனர்.

இது தொடர்பில் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்தவை வருமாறு:-

''சகாயமாதா ஆலய வீதியின் சுமார் 100 மீற்றர் வரையான பகுதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால், அந்தப் பகுதியில் பயணம் செய்ய முடியாத நிலை உள்ளது. இந்தப் பாதை மழைக்காலத்தில் மேலும் மோசமடைகின்றது. சகாயமாதா ஆலயம் மற்றும் மாமாங்கேஸ்வரர் வித்தியாலயம் ஆகியனவற்றுக்குச் செல்லும் பொதுமக்களும், மாணவர்களும், பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு அரசியல்வாதிகள் உட்பட பல்வேறு தரப்பினரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இருப்பினும் இதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.''- எனத் தெரிவித்துள்ளனர்.

## கிழக்கு மாகாணசபை முஸ்லிம்களை காட்டிக்கொடுத்துள்ளது - அதா உல்லா

20 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை கிழக்கு மாகாணசபை ஏற்றிருப்பதன் மூலம், முஸ்லிம் மக்களைக் காட்டிக் கொடுத்துள்ளது.

- இவ்வாறு தேசிய காங்கிரஸின் தலைவர் அதா உல்லா தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் பேசும்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களை இணைப்பதன் மூலம் முஸ்லிம் மக்களை மாகாணத்தில் சிறுபான்மை ஆக்குவதே 20 ஆவது அரசியல் சீர்திருத்தத்தின் நோக்கம் ஆகும் .

கிழக்கு மாகாணசபை முஸ்லிம் காங்கிரஸினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் கைகளில் இருக்கின்றமை சாபக்கேடு ஆகும்.

20 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை முன்மொழியும் இரா. சம்பந்தன், சுமந்திரன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் கிழக்கு மக்களுக்குத் தொடர்ந்து அநீதி இழைத்து வருகின்றனர். (ச)

## சிறுபான்மை இனத்தவரைஏமாற்றிப் பிழைக்கும் சில அரசியல்வாதிகள்

### கிழக்கு முதல்வர் சீற்றம்



அரசியல் தீர்வு பற்றிய எவ்வித அறிவும் இன்றி சில அரசியல்வாதிகள் சிறுபான்மைச் சமூகத்தவர்களை ஏமாற்றிப் பிழைக்கின்றனர்.

இவ்வாறு கிழக்கு மாகாண முதமைச்சர் செய்னுலாப்தின் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூரில் பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கான மூன்று மாடிக் கட்டடத்தை நேற்று வியாழக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல்வாதிகள் சிலர் மக்களிடத்தில் எவ்வாறு பேசுவது என்று தெரியாமல் உளறுகிறார்கள். அவர்கள் பாமர மக்களிடம் போய் ஆர்ப்பரிக்கின்றமை வெட்கமாக இருக்கின்றது. வாய்க்கு வந்தவற்றை எல்லாம் உணர்ச்சி வசப்படும்படி பேசி மக்களை உசுப்பேற்றி விடுகிறார்கள்.

அதன் விளைவுகளைக் கொண்டு எதிர்காலத் தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்பது அவர்களுடைய நப்பாசை. இத்தகைய குறைமதி அறிவு கொண்டவர்கள் சிறுபான்மை மக்களை எப்படி வழிநடத்த வேண்டும் என்ற அடிப்படை அறிவின்றிக் கொக்கரிக்கின்றனர்.

மக்களுக்குச் சிறந்த அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி வலியுறுத்த வேண்டி உள்ளது.

யாரோ இருட்டில் வெட்டிப் போட்ட படுகுழியில் இவர்கள் பகலில் வெட்ட வெளிச்சத்தில் போய் விழுகின்றார்கள்.

-என்றார். (ச)

# காணாமற்போனோர் பணியகத்துக்கு நம்பகமான ஆணையாளர்களை உடனடியாக நியமியுங்கள்!

## மேற்குலக நாடுகள் வலியுறுத்து

கொழும்பு, செப். 15

காணாமற்போனோர் பணியகத்தை உருவாக்கும் வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி மைத்திரியால் வெளியிடப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள மேற்குலக நாடுகள், இந்தப் பணியகத்துக்கு நம்பகமான ஆணையாளர்களை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளன.



காணாமற்போனோர் பணியகத்தை செப்ரெம்பர் 15ஆம் நாள் தொடக்கம் செயற் படுத்தும், வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டார்.

இதற்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கனடா உள்ளிட்ட நாடுகள்வரவேற்புத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதில் அவர், நல்லிணக்கத்துக்கான முன்நோக்கிய முக்கியமான நகர்வு. நன்கு நிதியளிக்கப்பட்ட, வலுவான, சுதந்திரமான, நன்கு தகுதியான ஆணையாளர்களுடன் செயற்படும் காணாமற்போனோர்பணியகம், பதில்களைத் தேடும் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த குடும்பங்களுக்கும் நம்பிக்கையை அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, காணாமல்போனோர் பணியகம் செயற்படத் தொடங்குவது, வரவேற்கத்தக்க, முக்கியமான ஒரு நடவடிக்கை. நம்பகமான ஆணையாளர்களைவிரைவாக சேர்த்துக்கொள்ள முடியும் என்று ஐரோப்பிய ஒன்றியம் நம்புகிறது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு முக்கியமான, சாதகமான நகர்வு. அடுத்த தகட்டம், ஆணையாளர்கள் மற்றும் செயற்படுதல் என்று கனடா தெரிவித்துள்ளது.



# குகுலே கங்கையின் வான் கதவுகள் அனைத்தும் திறப்பு!

கொழும்பு, செப்.15

இரத்தினபுரி, களுத்துறை மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளில் தொடர்ந்து அடைமழை பெய்து வருவதனால் குகுலே கங்கையின் அனைத்து வான் கதவுகளும் திறக்க வேண்டியேற்பட்டது என குகுலேகங்க நீர்மின் திட்டத்தின் பொறியியல் திட்ட மிடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இத் திட்டத்தின் இரு வான் கதவுகள் கடந்த இரு வாரங்களில் இருமுறை திறக்கப்பட்டு மீண்டும் மூடப்பட்டன.

இதன் காரணமாக அந்த நீர்த் தேக்கத்தின் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் பிரதீப் கொடி பிலி அறிவுறுத்தியுள்ளார்.

# பதவி பறிக்கப்பட்ட அருந்திகவும் மைத்திரியின் நிகழ்வில் பங்கேற்பு!

கொழும்பு, செப்.15

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசுவாசியெனக் கூறி பதவி பறிக்கப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ நேற்றுமுன் தினம் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன கலந்துகொண்ட வைபவ மொன்றில் இணைந்துகொண்டுள்ளார்.



ஸ்ரீலங்காவின் தேசிய இளைஞர் சேவைகள் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நிர்வகிக்கப்படும் ஒருகொடவத்தை மோட்டார் வாகன பொறியியலாளர் கற்கை பீடத்திற்கான புதிய கட்டடத் திறப்பு விழா நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்துவைத்த போது அங்குஅவருடன்இளைஞர்சேவைகள் பிரதி அமைச்சர் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டிருந்த அருந்திக பெர்னாண்டோவும் இணைந்து கொண்டிருந்தார்.

அரசின் கூட்டுப்பொறுப்புக்களுக்கு மதிப்பளிக்காது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்குக் சார்பாக செயற்பட்டுவந்தார் என்ற குற்றஞ்சாட்டப்பட்டு பதவி பறிக்கப்பட்ட கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ இந்த நிகழ்வில் கலந்துகொண்டமை அங்கு வந்திருந்த அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.



ஒரு கொடவத்தை மோட்டார் வாகன பொறியியலாளர் கற்கை பீடத்திற்கான புதிய கட்டடம், ஜப்பானிய அரசின் 1540 மில்லியன் ரூபா நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

(க)

# சுதந்திரத்தைப் பயன்படுத்தி கட்சியைப் பிரிக்க முயற்சி!

## மேல் மாகாண முதலமைச்சர் இசுறுதேவப்பிரிய கூறுகிறார்

கொழும்பு, செப். 15

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரமான நிலைப்பாட்டுடன் செயற்படுவதற்குக் கட்சியின் உறுப்பினர்களுக்கு அனுமதி அளித்துள்ள போதிலும் அந்த சுதந்திரத்தைப் பயன்படுத்தி சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த எவருக்கும் அனுமதி இல்லை என அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப் பிரிய தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அருந்திக பெர்னாண்டோவின் பிரதி அமைச்சர் பதவி பறிக்கப்பட்டது தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஸ்ரீலங்காதலைநகர்கொழும்பில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சியின் தலை மையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய அருந்திக பெர்னாண்டோவின் பதவி பறிக்கப்பட்டதை நியாயப் படுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இளைஞர் விவகார மற்றும் கத்தோலிக்க சமய விவகார பிரதி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட அருந்திக பெர்னாண்டோ தொடர்பில் நான் மதிப்பு வைத்திருக்கின்ற போதிலும் அவர் சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதிக்குத் தெரியவராது என நினைக்கும் பல விடயங்களைப் பொது மேடைகளில் தெரிவித்துள்ளார்.




ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியிலும் அதே போல் நல்லாட்சி அரசிலும் தனித்துவமாகசெயற்படுவதற்குஅனைவருக்கும் சகல உரிமைகளும் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த சுதந்திரத்தை நல்லாட்சி அரசையோ அல்லது கட்சியையோ நெருக்கடிக்குள் தள்ளுவதற்குப் பயன்படுத்த இடமளிக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இன்று கொழும்பைச் சென்றடையும் சைட்டம் எதிர்ப்பு வாகனப் பேரணி!

கொழும்பு, செப். 15

சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆரம்பிக்கப் பட்டுள்ள வாகனப் பேரணி இன்று கொழும்பை வந்தடையவுள்ளது.

இந்த நிலையில், அத்தியாவசிய தேவைகள் எவையுமின்றி கொழும்பு நகருக்கு வரவேண்டாம் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் மக்களை அறிவுறுத்தி யுள்ளனர்.




சைட்டம் விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மாவட்ட ரீதியிலான வேலை நிறுத்தப் போராட்டமொன்றை ஆரம்பித்திருந்தனர்.

இதுமாவட்ட ரீதியாக கட்டம் கட்டமாக ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப்போராட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதுமாத்திரமல்லாது இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு சமாந்தரமாக பல்வேறு நகரங்களிலிருந்தும் கொழும்பு நோக்கிய சைட்டம் எதிர்ப்பு வாகனப் பேரணிகளும் ஆரம்பிக்கப் பட்டிருந்தன.

யாழ்ப்பாணம், மட்டக் களப்பு, திருகோணமலை மற்றும் திஸ்ஸ மஹாராம ஆகிய பிரதேசங்களிலிருந்து செவ்வாய்க்கிழமை முற்பகல் ஆரம்பிக்கப்பட்ட இந்த வாகனப்பேரணிகள் இன்று கொழும்பைச் சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கந்தபுராணப் போட்டி மாணவருக்கு சான்றிதழ்

யாழ்ப்பாணம், செப்.15

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் சிறப்புற முன்னெடுக்கப்பட்ட கந்தபுராண எழுச்சி விழாவையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட கந்தபுராண நூல் அறிவுப்போட்டியில்வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பாராட்டுச் சான்றிதழ்கள் தற்போது பாடசாலைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலகங்களில்கடமையாற்றும்இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சான்றிதழ்களை வழங்கி வருகின்றனர். (இ)

## தினசரி ராசி பலன் 15.09.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 30 ஆம் நாள் தசமித்திதி இரவு 06.30 மணி வரை. பின்னர் ஏகாதசி. நட்சத்திரம் புனர்பூசம் பி.இ 2.11 மணி வரை. பின்னர் அசுபயோகம் பி.இ. 03.55 மணி வரை பின்னர் சுபயோகம். ராகுகாலம் பகல்10.34 மணி முதல் 12.05 மணி வரை. சுபநேரம் மாலை 6.03 மணி முதல் 7.32 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத தேய்பிறை தசமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: புனர்பூசம்**

‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன கடுமையாக உழைத்தால் கணிசமான ஆதாயம் கிட்டும் வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். யாரையும் நம்பி வாக்குறுதி கொடுப்பது நல்லதல்ல.

**ரிஷபம் :** இன்பமான நாள் பண வரவு அதிகரிக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சி குடிகொள்ளும் ஆடை அணிகலன்கள் சேரும் சொத்து விடயமாக நல்ல செய்தி கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடக்கும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பண வரவு தாராளமாகும். குடும்ப ஒற்றுமை பலப் படும். வேலையில் மாற்றம் வேண்டுவோருக்கு அருமையான வாய்ப்புக் கிட்டும்.

**கடகம்** யோசனையான நாள் வருமானம் குறைவடையும் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் சிரமப் படுவார்கள் பணவிடயத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை.

**சிம்மம் :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு ஓர் இனிய வாய்ப்புக் கிட்டும். சகோதர உறவு பலப்படும்.

**கன்னி :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும் செலவுகள் அளவுக்கதிகமாகும். உறவினர்களால் பிரச்சினைகள் ஏற்படும். திருமண முயற்சிகள் தாமதமடையும்.

**துலாம் :** மேன்மையான நாள் பொருளாதாரம் ஏற்றமடையும். தொழில் ஆதாயம் கிடைக்கும். சகோதர உறவு வலுப்பெறும் இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் இணைவார்கள்.

**விருச்சிகம் :** குழப்பமான நாள். மனதில் சஞ்சலம், யோசனை அதிகரிக்கும். எதையும் சரிவர முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம் உண்டாகும். உடல் நலம் பாதிப்படையும்.

**தனுசு :** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் தடை தாமதங்க ஏற்படும் பயணங்களைத் தவிர்க்கவும் வியாபாரம் சுமாராக இருக்கும்.

**மகரம் :** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். சகோதர உறவு வலுப் பெறும்.

**கும்பம் :** யோகமான நாள். பணம் எல்லா வழியாலும் வந்து சேரும். பூர்விக சொத்துக்கள் வந்து சேரும். வாகன யோகம் உண்டாகும். மாணவர்கள் உயர் கல்வி நிமித்தம் வெளிநாடு செல்லத்தயாராகுவார்கள்.

**மீனம் :** சஞ்சலமான நாள் செலவுகள் வந்து கொண்டிருக்கும். உடல் நலம் பாதிப்படையும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் கால், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

## ‘ஐம்பதிலும் ஆசை வரும்’ காட்சியும் கானமும்

சுன்னாகம், செப்.15

குபேரகா கலைக்கல்லூரி முதியோர் தினத்தை முன்னிட்டு ஐம்பது வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு நடத்தப்படும் ‘ஐம்பதிலும் ஆசை வரும்’ காட்சியும் கானமும் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபையில் இடம்பெறவுள்ளது.

## தொண்டர் ஆசிரியருக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி, செப்.15

வடமாகாண தொண்டர் ஆசிரிய நியமன நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக் கிழமை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள தனியார் கல்வி நிலையத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (இ)

## கருகம்பனை தமிழ்மன்ற பொது மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

தெல்லிப்பழை, செப்.15

தெல்லிப்பழை கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையத்தின் பொது மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நகுலேஸ்வரம் கிராம அலுவலகத்துக்கு முன்பாக உள்ள சனசமூக நிலையக் காணியில் தலைவர் சி.பவநீதன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பிரதம விருந்தினராகவும் தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, வலிகாமம் வடக்கு பிரதேச சபைச் செயலாளர் இ.பகீரதன், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஏ.றஞ்சித் மாசிங்க, கீரிமலை இராணுவ முகாம் இராணுவ அதிகாரி சி.ரணவீர மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.அபயரத்ன ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

ஆசியுரையை நகுலேஸ்வர ஆதீன பிரதம குரு ராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார். (இ)

## தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை நாளை

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை திறப்பு விழா நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வைத்தியசாலை சங்கத் தலைவர் இ.சேது நாதன்தலைமையில்இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க.நந்தகுமாரன், தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, யாழ். போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் ச. ஸ்ரீ பவானந்தராஜா, தெல்லிப்பழை ஆதார வைத்திய அத்தியட்சகர் யோ.திவாகர் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

## குண்டும் குழியுமாகக் காணப்படும் கச்சாய் அம்மன் கோயில் வீதி

கொடிகாமம் பிரதேச சபைக்கு உட்பட்ட கச்சாய் அம்மன் கோயில் வீதி நீண்ட காலமாக புனரமைப்பு பணிகள் இடம்பெறாமல் குண்டும் குழியுமாக போக்குவரத்து செய்வதற்கு சிரமமாக காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் போக்குவரத்து சேவை குறித்த வீதியினூடாக இடம்பெறுவதுடன் தினமும் அதிகளவானோர் பயன்படுத்தும் மிக முக்கியமான வீதியாக இது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மழை காலத்தில் இந்த வீதியில் நீர் தேங்கி காணப்படுவதாகவும் மழை காலத்திற்கு



முன்னர் வீதியை புனரமைப்புச் செய்து மக்களின் இடர் போக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-21)

**தமிழீழ மக்களின் விடிவுக்காக - தமிழ் மண்ணை மீட்பதற்காக - விடுதலைப் புலி வீரன் திலீபன் நல்லூரில் அறப் போரில் - உண்ணாவிரதத்தில் - குதித்த நாள் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.**



# இந்தியப் பேரரசுக்கு அஹிம்சையை உணர்த்திய

# எங்கள் திலீபன்!

புரட்சி என்கிற வார்த்தைக்கு அடுத்து நமது நாட்டில் மதிப்பு இழந்துவிட்ட ஒரு வார்த்தையாக இருப்பது உண்ணாவிரதப் போராட்டம் என்பது அமைதி முறையில் எதிரியை உடலால் வருத்தாமல் மனத்தால் வருந்தச் செய்யும் போராட்டமாக நம்மால் தேசப்பிதா என்றழைக்கப்படும் காந்தியினால் தோற்றுவிக்கப்பட்டது. காந்தி செய்து கொடுத்த ஆயுதத்தை பலர் தமது கொள்கைகளுக்காக பயன்படுத்தினர். ஆனால், உண்ணா விரதம் இருந்து உயிரிழந்தோர் என்பது சிலரே. அவற்றில் மிகவும் முக்கியமானவர் திலீபன் என்று அழைக்கப்படும் பார்த்திபன் இராசையா.

யாழ்ப்பாணம் பகுதியில் ஊரெழு எனும் ஊரைச் சேர்ந்த திலீபன் நவம்பர் 27, 1963 ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை செல்வாவின் அஹிம்சைப் போராட்டம் தோல் வியடைந்த பின்பு இலங்கைத் தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுத்தனர். ஆரம்பத்தில் ஆயுத போராட்டத்தில் ஈடுபட்ட திலீபன் 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்தார். கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தண்ணீர் அருந்தப் போவதில்லை என்று அறிவித்தார். ஆனால், அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதமையால் உண்ணா விரதத்தின் பன்னிரண்டாம் நாளான செப்ரெம்பர் 26, 1987இல் இவ்வுலகை விட்டு விடை பெற்றுச் சென்றார்.



**திலீபன் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள்**

1). மீளக்குடியமர்த்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

2). சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

3). அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4). ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப் படவேண்டும்.

5). தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

முதல் நாள் ஈழ மக்கள் கூடி நின்றிருந்தார்கள். அவர்களது உள்ளம் உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருந்தது. திலீபன், உண்ணாவிரத மேடைக்குச் சென்றார். மேடை ஏறும் முன் ஒரு வயதான அம்மா திலீபனுக்கு ஆரத்தி எடுத்து திருநீறு பூசி விடுகிறார். சரியாக 9.45க்கு திலீபன் மேடையில் அமர்ந்தார். உண்ணாவிரதம் எதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்கிற விளக்க உரை கொடுக்கப்பட்டது. வாசிப்பதற்கு புத்தகங்கள் கேட்ட திலீபனுக்கு சே குவேரா, பிடல் காஸ்ட்ரோ, யஸீர் அரபாத் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு வழங்கப்பட்டது. தொடர்ந்து கவிதைகள், உண்ணாவிரத விளக்க உரைகள் அரங்கேறின. இரவு 11 மணிக்கு விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் வந்து திலீபனை சந்தித்தார். அதன் பிறகு பத்திரிகையாளர்களை சந்தித்து விட்டு அதிகாலை 1.30 இற்கு உறங்கினார்.

இரண்டாம் நாள் அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து விட்ட திலீபன் சிறுநீர் மட்டும் கழித்து விட்டு முகம் கழுவி தலைவாரிக் கொண்டார். அனைத்து செய்தித்தாள்களையும் படித்து முடித்தார். இளைஞர்கள் பலர் கவிதை வாசித்துக் கொண்டிருந்தார்கள். தான் பேச விரும்புகிறேன் எனத் திலீபன் கூற அவரது நண்பர்கள். சக்தி விரயமாகி விடும் என்று மறுத்தார்கள். இரண்டே நிமிடம் என்று சொல்லிவிட்டு உரையாற்றினார். அன்று இரவும் பிரபாகரன் வந்து திலீபனைப் பார்த்தார். பன்னிரண்டு மணிக்கு உறங்கச் சென்றார் திலீபன்.



**ஈழ மண்ணின் வீரவேங்கை அவன்!!**



மூன்றாம் நாள் காலையில் எழும் போதே திலீபனின் உதடுகள் தண்ணீர் அருந்தாதமையால் வெடித்து இருந்தது. கண்கள் சற்று உள்ளே போயிருந்தன. மிகவும் சோர்வாக இருந்தார்.

சிறுநீர் கழிக்கச் சென்ற திலீபன் இருபது நிமிடங்கள் முயன்றும் சிறுநீர் கழிக்க முடியாமல் கஷ்டப்பட்டார். காலை ஒன்பது மணி முதல் இளைஞர்கள் வெள்ளை உடையில் வந்து குவிய ஆரம்பித்தார்கள். கண்ணீர் கவிதைகளும் வீர உரைகளும் முழங்கிக் கொண்டிருந்தன. அன்று பெரு மழை பெய்தது. அன்று இரவு அவரது உடல் நிலையை பரிசோதிக்க மருத்துவர் வரவழைக்கப்பட்டார். ஆனால், திலீபன் மறுத்துவிட்டார். மிகவும் கஷ்டப்பட்டு திலீபன் உறங்கும் போது மணி ஒன்று.

நான்காம் நாள் அதிகாலை ஐந்து மணிக்கே திலீபன் எழுந்துவிட்டார். சிறுநீர் கழிக்க வேண்டும் என்று கூறினார். ஆனால், அவரால் நடக்க முடியவில்லை என்பதால் அவரது படுக்கையிலேயே சிறுநீர் கழிக்க ஏற்பாடு செய்தார்கள். ஆனால், அவரால் சிறுநீர் கழிக்க முடியவில்லை. பிறகு அவரை மெதுவாக மேடைக்குப் பின்புறம் அழைத்துச் சென்றார்கள். திலீபன் வயிற்றை பிடித்துக்கொண்டு மிகுந்த கஷ்டப்பட்டார். சிறிது சிறுநீர் வெளியேறியது. உதவி இந்தியத் தூதுவர் கென் பேச்சுவார்த்தைக்காக வந்தார். அவரை அன்ரன் பாலசிங்கமும் மாத்தையாவும் சந்தித்துப் பேசினார். சிறிலங்கா நவ சமசமாசக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார வந்து திலீபனைச் சந்தித்தார். சோர்வில் விரைவாகவே திலீபன் உறங்கிவிட்டார்.

ஐந்தாம் நாள் திலீபனால் இன்று எழவே முடியவில்லை. உடல் பயங்கரமாக வேர்த் துக் கொட்டியது. சிறுநீரகம் பாதிப்படையத் தொடங்கி விட்டது. இருதயம் பலமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து அவர் நீராகாரம் எடுக்காவிட்டால் நிலைமை மேலும் மோசமாகி எந்த வேளையிலும் எதுவும் நடக்கலாம் என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இந்திய சமாதானப் படையினரின் யாழ். கோட்டை இராணுவ முகாம் பொறுப்பாளர் கேணல் தரார் திலீபனைப் பார்க்க வந்தார். மக்கள் அவர் மீது கோபமாக இருந்தனர். திலீபனைச் சந்தித்துவிட்டு மேலிடத்தில் பேசுவதாகச் சொல்லிவிட்டுச் சென்றார். ஆறாவது நாள் திலீபனால் இன்று பேசமுடியவில்லை. வழக்கம் போல் மக்களும் பத்திரிகையாளர்களும் குவிந்திருந்தார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ராகவன், ஜெயக்குமார், கடற்படைதளபதி அபயசுந்தர் ஆகியோரிடம் இந்திய அரசு பேசியது ஆனால், எந்த முடிவும் எட்டப்படவில்லை.

ஏழாவது நாள் இந்திய பத்திரிகைகள் பல வந்திருந்தன. அவர்கள் திலீபனிடம் பேச விரும்பினார்கள். தனது இருண்டு போயிருந்த விழிகளைத் திறந்து பார்த்தார். அவர்கள் கேட்கும் கேள்வி திலீபனின் காதில் விழவில்லை.

(14 ஆம் பக்கம் பார்க்க...)




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

அமெரிக்கா 2015 இல் இந்திய ஆதரவுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெய்ஜிங்குடன் கொண்டிருந்த நெருக்கமான உறவுகளின் காரணமாக அவரை அகற்றி, அவருக்குப் பதிலாக மைத்திரிபால சிறி சேனவை நியமிப்பதற்கும் உதவியது.



ஐ.ஓ.சி. கூட்டத்திற்கு ஒரு வாரத்துக்கு முன்னர், இலங்கை கடற்படையின் புதிய தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா, ''கடற்போக்குவரத்து சுதந்திரத்துக்கு'' தனது அர்ப்பணிப்பை அறிவித்தார். இலங்கை கடற்படையின் எதிர்கால பாத்திரம், ''ஏடன் வளைகுடா மற்றும் மலாக்கா ஜலசந்திக்கும் இடையில் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களைப் பாதுகாப்பதே'' என அவர் அறிவித்தார். இரு இடங்களும் சீனக் கப்பல் போக்குவரத்தின் மூலோபாய வெடிபுள்ளிகள் ஆகும்.

இந்தியப் பெருங்கடலில் உள்ள கடல்வழிப் பாதைகள் உலகில் பரபரப்பான மற்றும் மிகவும் சிக்கலான கடல்வழி போக்குவரத்து இணைப்புகளாகும் என்று இந்திய அமைச்சர் ஸ்வராஜ் மாநாட்டில் தெரிவித்தார். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தியாவின் மொத்த வர்த்தகத்தில் 90 சத விகிதமும் அதன் அனைத்து எண்



ணெய் இறக்குமதிகளும் இந்த வழிகளையே பயன்படுத்துகின்றன. ''இந்திய பெருங்கடலில் பிராந்தியத்தில் உள்ள முக்கிய மையமாக இந்தியாவிற்கு இந்தப் பாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்று அவர் அறிவித்தார்.

இந்தியாவின் மூலோபாயம், ''இந்தியப் பெருங்கடலிலும் அதற்கு அப்பாலும் கடலோர அரசுகளுக்கு மத்தியில் துறைமுக இணைப்புகளை விரிவுபடுத்துவதையும் உள்ளடக்கியுள்ளது'' என்று ஸ்வராஜ் தொடர்ந்தார். இலங்கை, மாலைதீவு, மொரிஷியஸ் மற்றும் சீசெல்ஸ் போன்ற நாடுகளுடன் இந்தியா இத்தகைய முன்னேற்றங்களை விரிவுபடுத்துகிறது. கொல்கத்தாவின் கிழக்கு இந்திய துறைமுகத்துடன் மியன்மாரில் உள்ள சிட்வெ துறைமுகத்தை இணைக்கும் கலடன் போக்குவரத்து திட்டம் மற்றும் தாய்லாந்துக்கான முத்தரப்பு நெடுஞ்சாலை மற்றும் ஈரானில் உள்ள சபாஹார் துறைமுகத் திட்டம் உட்பட ஏனைய திட்டங்களைப் பற்றி ஸ்வராஜ் சுட்டிக்காட்டினார்.

மோடி அரசாங்கத்தின் இராணுவ கட்டமைப்பு அமெரிக்காவால் ஊக்குவிக்கப்பட்டது. அமெரிக்கா இந்தியாவின் கடும்-பகையாளிகளான பாகிஸ்தான் மற்றும் சீனாவுக்கும் கேடு விளைவிக்கும் பல்வேறு மூலோபாய நலன்களை இந்தியாவுக்கு வழங்கியிருக்கிறது. சர்வதேச அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தில் இந்தியாவிற்கு ஒரு சிறப்பு நிலைமையை நிறுவுவதும், மேம்படுத்தப்பட்ட அமெரிக்க ஆயுதக் கருவிகளை பெற அனுமதிப்பதும் இதில் அடங்கும். இந்திய துறைமுகங்களில் அமெரிக்க கடற்படை கப்பல்கள் நிறுத்தப்படுவதற்கும் பழுது பார்க்கவும் மற்றும் பராமரிப்பிற்காகவும் இந்தியா அனுமதி வழங்கியதன் மூலம் பிரதியுபகாரம் செய்துள்ளது.

''ஒத்துழைப்பு மற்றும் கூட்டு நடவடிக்கையின் பண்பாட்டை உறுதிப்படுத்துகின்ற ஒரு பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்குவது முக்கியம்'' என ஸ்வராஜ் மாநாட்டில் தெரிவித்தார். சமீபத்தில் இலங்கையின் அம்பாந்தோட்டைதுறைமுகத்தில் ஒரு பெரும்பகுதி பங்குகளை சீனா கையகப்படுத்தியதை சுட்டிக் காட்டி கொழும்பு ஊடகங்கள் அவரது கருத்



துக்கு குறுக்கிட்டிருந்தன. அம்பாந்தோட்டை ஒப்பந்தத்தை தொடர்ந்து, துணை கண்டத்தையும் இந்தியப் பெருங்கடலையும் தனது செல்வாக்கு மண்டலமாகக் கருதும் இந்தியா, வெளிவிவகாரச் செயலர் சுப்ரமணியம் ஜெய்சங்கரை புதுடில்லியின் கவலையைத் தெரிவிக்க இலங்கைக்கு அனுப்பிவைத்தது.

இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ.ஓ.சி. மாநாட்டில் கூறியதாவது: ''இலங்கையின் முக்கிய கடல் துறைமுகங்களை, குறிப்பாக அம்பாந்தோட்டைதுறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான தீர்மானத்தை பற்றி நான் குறிப்பிடுகிறேன். சிலர் அதை இராணுவத் தளமாக சித்தரித்தனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன



தலைமையிலான இலங்கை அரசாங்கமானது எந்தவொரு நாட்டுடனும் இராணுவக் கூட்டுக்களில் ஈடுபடவில்லை அல்லது வெளிநாடுகளுக்கு இலங்கை தளங்களை அனுமதிக்கவில்லை என்பதை நான் தெளிவாகக் கூறுகிறேன்.''

விக்கிரமசிங்கவின் கருத்துக்கள்இ புதுடில்லியை மட்டுமன்றி, எல்லாவற்றுக்கும் மேலாக வொஷிங்டன், டோக்கியோ மற்றும் சீனாவிற்கு எதிராக அமெரிக்க தலைமையிலான பொருளாதார மற்றும் இராணுவ கட்டமைப்பில் ஈடுபட்டுள்ள அனைவரையும் சமாதானப்படுத்த எடுத்த முயற்சியாகும். ஐ.ஓ.சி. ஒன்று கூடலானது இந்த தயாரிப்புகளின் உயர்ந்த கட்டத்தின் மற்றோர் அறிகுறியாகும்.

பாகிஸ்தான் அதன் எல்லை பகுதிகளிலிருந்து செயல்பட்டு வரும் ஆப்கான் கிளர்ச்சியாளர்களை ஒடுக்காவிட்டால், அதை தண்டிப்பதென்ற ட்ரம்ப் அச்சுறுத்தலின் அர்த்தத்தை அமெரிக்க அரசு அதிகாரிகள் வெளிப்படுத்த தொடங்கியுள்ளார்கள். ஆப்கான் போரில் சண்டையிடுவதில் ஒத்துழைத்ததற்காக அதற்கு வழங்கப்பட்ட நிதியுதவிகள் மற்றும் உதவிகளின் வெட்டுக்களை மட்டும் இத் தண்டனைகள் உள்ளடக்கி இருக்கவில்லை. மாறாக பாகிஸ்தானின் பரம-போட்டியாளரான இந்தியா ஆப்கானிஸ்தானில் ஒரு பெரிய பாத்திரம் வகிக்க வேண்டுமென்ற ஊக்குவிப்பும் மற்றும் ஏழு தசாப்தகால காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவுக்கு சார்பான நிலைப்பாட்டை ஏற்றிருப்பதும் சேர்ந்திருந்தது.

பாகிஸ்தானுக்குள் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்வது தெற்காசியாவின் இந்த போட்டி அணுஆயுத சக்திகளுக்கு இடையே முற்றுமுழுதான போரைத் தூண்டும் அபாயத்தைக் கொண்டுள்ளது என்ற போதினும் கூட, இந்தியா அதன் தயார்நிலை குறித்து மீண்டும் மீண்டும் பெருமை பீற்றியுள்ளது.

**வொஷிங்டனின் அச்சுறுத்தல்களால் கதிகலங்கிய இஸ்லாமாபாத், அதன் ஆதரவிற்காக பெய்ஜிங்கை நோக்கி திரும்பியுள்ளதால்.**

வொஷிங்டனின் அச்சுறுத்தல்களால் கதிகலங்கிய இஸ்லாமாபாத், அதன் ஆதரவிற்காக பெய்ஜிங்கை நோக்கி திரும்பியுள்ளதால், இது, 1962 எல்லை போருக்குப் பின்னர் இந்தியா மற்றும் சீனா அவற்றின் எல்லையில் மிகவும் கடுமையான விட்டுக்கொடுப்பற்ற நிலைப்பாட்டில் ஈடுபட்டுள்ளதும் இந்திய மற்றும் பாகிஸ்தானிய கட்டுப்பாட்டிலான காஷ்மீரைப் பிரிக்கின்ற எல்லை கட்டுப்பாட்டு கோடு நெடுகிலும் வழமையாக இந்திய மற்றும் பாக்கிஸ்தானிய துருப்புகள் பேராபத்தான குண்டுவீச்சு நடத்தி வருகின்றதுமான ஒரு பகுதியில் மேற்கொண்டும் பதற்றங்களை அதிகரித்துள்ளது.

ட்ரம்ப்அவரின்கடந்ததிங்கட்கிழமை மாலை உரையில் ஆப்கான் போரின் ஒரு பெரிய அமெரிக்க தீவிரப்படுத்தலுக்கானதிட்டங்களைவிவரிக்கையில், பாகிஸ்தான் ''உடனடியாக'' போக்கை மாற்றிக் கொண்டு, குற்றவாளிகள் மற்றும் பயங்கரவாதிகளுக்கு இடமளிப்பதை'' நிறுத்திக்கொள்ளவேண்டுமென வலியுறுத்தினார்.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

‘சுதந்திர வேட்கை’ என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் ‘Will To Freedom’ என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் ‘தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு’ என்ற பீடிகையுடன் வெளியானது.



96




## அத்தியாயம் - VI

## இந்திய – இலங்கை முரண்பாடு

ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப் படுவதும் இந்தியப் படைகள் திருப்பி அழைக்கப்படுவதும் சம வேளைகளில் நடைபெற வேண்டும் என்று இந்தியப் பிரதமர் வலியுறுத்தினார். அது பிரேம தாசாவுக்கு எரிச்சலூட்டுவதாக அமைந்தது.

பிரேமதாசா கேட்டுக்கொண்ட போதிலும் ஜூலை முடிவிலேயே இந்திய அமைதிப் படைகள் திருப்பி அழைக்கப்பட மாட்டா என்பது, கடும் வார்த்தைப் பிரயோகம் மூலம் எழுதப் பட்ட காந்தியினுடைய கடிதம் மூலம் அறியமுடிந்தது. இந்தியா தனது படைகளைத் திருப்பி அழைக்கும் முன், வரதராஜப்பெருமாளின் மாகாண ஆட்சிக்கும் பாதுகாப்பும் உறுதி நிலையும் வழங்க விரும்பியது. ஆனால், இதைச் சாதிப்பதற்கு இந்திய இராணுவ நிர்வாகம் கடைப்பிடித்த வழிமுறைகள் தமிழ் மக்களுக்கு வெறுப்பூட்டுவனவாக இருந்தன. கட்டாய ஆட்சேர்ப்பில் இருந்து தப்பிப் பிழைப்பதற்காக, பல இடங்களில் மாணவர்கள் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்தார்கள். கைது செய்யப்பட்டு, கட்டாயப் பயிற்சி அளிக்கப்பட்டவர்களில் கணிசமான தொகையினர், தங்கள் நிலைகளில் இருந்து தப்பியோடி, புலிகளுடன் சேர்ந்தார்கள். சம்மதமோ விருப்பமோ இல்லாது நிர்ப்பந்த அடிப்படையிலே சேர்க்கப்பட்ட இளைஞர் அணி, இலட்சியத்துக்கான தீவிர அர்ப்பணிப்போடும் போர் அனுபவங்களால் புடமிடப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இணையாக மாட்டார்கள் என்பது நன்கு தெரிந்திருந்த போதிலும், இந்திய இராணுவமும், ஈ.பி.ஆர்.எல்.எவ். உம் தொடர்ந்தும் படை திரட்டலில் ஈடுபட்டன. பெருமாள் நிர்வாகத்துக்கு கூடுதலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்று ராஜீவ் காந்தி கேட்டுக்கொண்டார். இருந்த போதிலும், சிறிலங்கா அரசு, அனைத்து நிர்வாக அதிகாரங்களையும் படிப்படியாகத் தளர்த்தி, நீதியையும் தடை செய்து, வடக்கு, கிழக்கு மாகாண சபையை நிரந்தரமாகவே நீதி வற்றிப்போன ஒரு சபையாக உருக்குலைத்திருந்தது.

## முற்றிச்சென்றது முரண்பாடு!

ராஜீவ் காந்தியிடம் இருந்து கிடைத்த விதண்டாவாதப் பதிலால் சீற்றமடைந்த பிரேமதாசா, விடுதலைப் புலி அணிக்கு, ஹமீது மூலம் செய்தி அனுப்பினார். அதில் சிறிலங்காப் படைகளுடன் விடுதலைப் புலிகள் ஒரு முறையான போர் நிறுத்தத்துக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதற்கு அமைய இரு தரப்பு போர் நிறுத்தம் ஒன்று புலிகளாலும் சிறிலங்கா அரசாலும் கூட்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. கூட்டு செய்தி அறிக்கை மூலம் ஜூன் மாதம் 25 ஆம் திகதி அன்று அது பகிரங்கப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வு பிரேமதாசாவுக்கு மகிழ்ச்சியை அளிக்க, 29 ஆம் திகதி அன்று ராஜீவ் காந்திக்கு அவர் ஒரு குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பினார். விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரச படைகளுக்கும் இடையே அமைதி ஏற்பட்டு விட்டது எனவும் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க பேச்சு முயற்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது எனவும் அறிவித்தார். இந்தப் பேச்சுக்கு இடையூறு ஏற்படக் கூடாது என்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்திய அமைதிப் படையின் தாக்குதல் நடவடிக்கை அனைத்தையும் முடிவுக்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொண்டார்.

மறுநாள், ஜூன் மாதம் 30 ஆம் திகதி ராஜீவ் காந்தி அனுப்பிய குறும் பதில் ஒன்று பிரேமதாசாவை வந்தடைந்தது. நையாண்டித் தொனியில் எழுதப்பட்ட அந்தக் கடிதம் புலிகளுக்கும் சிறிலங்காவுக்கும் இடையே உருவான போர் நிறுத்த உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை உதாசீனப்படுத்தியது. விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் கையளிக்க வேண்டும் என்று ஆணையிட்டது. அதில், இது தொடர்பான பத்தி பின்வருமாறு அமைந்தது.

“இந்திய- இலங்கை ஒப்பந்தம், தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் சிறிலங்காப் படைகளுக்கும் இடையே பகைமை ஒழிப்புக்கும் ஏற்பாடு செய்வதோடு, வடக்கு கிழக்கு மாகாணத்தில் படைப் பாசறைகளில் சிறிலங்காப் படைகள் தரித்திருப்பதற்கும் ஏற்பாடு செய்கின்றது. இவை இரண்டும் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி நடைபெற்று விட்டன. ஆகவே, சிறிலங்கா படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் செம்மையான பகைமை ஒழிப்பு ஏற்கனவே இடம்பெற்று விட்டது. இந்த யதார்த்த நிலையை விடுதலைப் புலிகள் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கின்றமை எமக்கு மகிழ்ச்சி தருகின்றது.

“பகைமை முடிவுக்கு விடுதலைப் புலிகள் முழுமையாகச் சம்மதிக்கிறார்கள் என்றால், சிறிலங்காவின் ஐக்கியத்தையும் இறையாண்மையையும் அவர்கள் இப்போது ஏற்றுக் கொண்டு, வன் செயலைக் கைவிட்டு, மக்களாட்சி மரபை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதே தெளிவாகத் தெரிகின்றது.

“விடுதலைப்புலிகள் வன்செயலைக் கைவிட்டு இருக்கின்றமையை அடுத்து, 1987 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தொடங்கி, இன்னமும் முற்றுப்பெறாத ஆயுதக் கைய ளிப்பை சிறிலங்கா அரசின் ஊடாக மீளத் தொடர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். விடுதலைப் புலிகள், தங்கள் ஆயுதங்களைக் கையளிப்பதோடு சிறிலங்கா அரசுக்கு எதிரான வன்செயலை மட்டும் கைவிடுகின்றமையோடு நிற்காமல், வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய குடிமக்களுக்கு எதிரான வன்செயலைக் கைவிடுவார்களாக இருந்தால் அன்றி போர் நிறுத்தப் பிரகடனம் அர்த்த மற்றதாகிவிடும்’’.

விடுதலைப் புலிகளோடு புதுடில்லிப் போர் நிறுத்தம் புரிய விரும்பவில்லை என்பதை ராஜீவின் கடிதம் தெளிவாக உணர்த்தியது. போர் நிறுத்தத்துக்கு முன், ஒப்பந்த கடப்பாடுகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்று இந்தியா வாதிட்டது. விடுதலைப் புலிகளால் சற்றேனும் ஏற்க முடியாத நிபந்தனைப் பட்டியலில் அந்தக் கடப்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவை (அ) ஆயுதக் கையளிப்பு. (ஆ) சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை கைவிட்டு சிறிலங்காவின் ஐக்கியத்தையும் இறையாண்மையையும் ஏற்றுக் கொள்ளல். (இ) ஏனைய குடிமக்களுக்கு (அதாவது ஈ.பி.ஆர்.எல்.எவ். துணைப்படை) எதிராக வன்செயலைத் துறத்தலாகும். இந்த விடயங்கள் தொடர்பாக சிறிலங்கா அரசின் தலைவர் விளக்கம் தரவேண்டும் என்று ராஜீவ் தனது கடிதத்தில் கேட்டிருந்தார்.

சிறிலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஜூலை மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற கொழும்புப் பேச்சில் இந்தியத் தலைவர் அனுப்பிய முரண்பாடுகளுக்குரிய கடிதம் பற்றியே விவாதிக்கப்பட்டது. ராஜீவ் கேட்ட கேள்விகளுக்கும் விதித்த நிபந்தனைகளுக்கும் பதில் அளிக்கும்போது, சிறிலங்காவுக்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட இருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அற்பமாகக் கருதி, இந்தியா புறக்கணித்ததையொட்டி விடுதலைப் புலிகள் அணி, தன் வருத்தத்தைத் தெரிவித்தது.

சிறிலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிப் படை அணிகளுக்கும் இடையே செம்மையான போர் நிறுத்தம் ஏற்பட ஒப்பந்தம் ஏற்கனவே வழி செய்து விட்டதாக காந்தி கூறியிருக்கின்றமை உண்மைக்கு புறம்பானது என்றும் பிழையான அபிப்பிராயத்தை தோற்று விக்கிறது என்றும் புலிகள் வாதிட்டார்கள். ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்ட போர் நிறுத்தம் செம்மையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. சிறிலங்கா படைகளுக்கும் புலிப் போராளிகளுக்கும் இடையே பல மோதல்கள் இடம்பெற்று கணிசமான அளவு சிங்களப் படையினர் கொல்லப்பட்டும் இருந்தார்கள். போரில் ஈடுபட்டிருந்த இரண்டு பிரிவினருக்கும் இடையே அமைதியை மேற்பார்வை செய்யும் பொறுப்பை எடுத்துக் கொண்ட இந்திய ஆயுதப் படைகள் வன்செயலைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் படுமோசமான தோல்வி கண்டிருந்தன.

இந்திய அமைதிப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையே போர் நிறுத்தம் வருவதற்கு இரண்டு நிபந்தனைகளை ராஜீவ் விதித்திருக்கிறார் என புலிகள் சுட்டிக் காட்டினார்கள். ஒன்று புலிகள் ஆயுதக் கையளிப்பை மீளத் தொடங்க வேண்டும். இரண்டு வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய அனைத்துக் குடிமக்களுக்கு எதிராகவும் வன்முறையை பயன்படுத்துவது இல்லை என்று பிரகடனம் செய்ய வேண்டும். இந்தியப் படையின் ஆயுதக் களைவு முயற்சி முற்று முழுதாகத் தோல்விகண்டிருந்தது. அந்த முயற்சியே இரத்த ஆறு ஓடும் போரா கவும் நீடித்துச் செல்லும் போராகவும் வடிவெடுத்தது. இந்திய அமைதிப் படை தானே ஒரு கொலைப் பொறியாக மாறியது. ஆயிரமாயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்தார்கள். இப்பொழுதோவென்றால், சிறிலங்கா அரசுத் தலைவராலேயே அமைதிப் பேச்சு தொடக்கப்பட்டிருக்கின்றது. அது ஒரு புரட்சிகர புதிய நிலையை தோற்றுவித்திருக்கின்றது. அதை நடைமுறைச் சாத்தியமான வழியாக இனம் கண்டு அதற்கு முகம் கொடுக்க வேண்டும். சிறிலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நடந்துகொண்டிருக்கும் பேச்சு எதுவித நிபந்தனைகளோ, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கடப்பாடு நெருக்குவாரங்களோ இல்லாமல் நடந்து கொண்டிருக்கின்றன; ஆயுதங்களை வைத்திருப்பதும் அவற்றைக் களைவதும் சிறிலங்காவுக்கும் புலிகளுக்கும் இடையே உள்ள ஒரு பிரச்சினையாகும்.

(தொடரும்...)



‘ஜனநாயக கோட்பாடுகள் பற்றிய எண்ணக் கருக்களை மக்கள் மத்தியில் தீவிரமாக விதைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

# மக்கள் சேவகர்களாகக் காட்டிக்கொள்ளும் அரசியல்வாதிகள் வெற்றி பெற்ற பின்னர்

## மக்களை மதிக்காத; மறந்துவிடும் நிலை!

சர்வதேச மக்களாட்சி நாள் ஆண்டுதோறும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது. நவம்பர் 8, 2007 இல் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டப் பிரகடனப்படியே அனைத்துலக மக்களாட்சி நாள் கொண்டாடப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் இந்தப் பொதுத் தீர்மானத்தை 192 உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

உலகளாவிய ரீதியில் எந்தவொரு தனிமனிதனும் தனது சொந்த அரசியல், பொருளாதாரம், சமூக மற்றும் கலாசார நடவடிக்கைகளைத் தனது வாழ்நாளில் அனுபவிக்கும் உரிமை கொண்டவன் ஆவான் என பொதுச் சபைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய உலகிலுள்ள அனைத்து நாடுகளினதும் பிரதிநிதிகள், ஐ.நாவின் சகல அமைப்புகள், அரச அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் அமைப்புகள் அனைத்தும் இந்தத் தினத்தைக் கொண்டாட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை கேட்டுள்ளது.

உலகில் காணப்படும் அரசியல் முறைக் கோட்பாடுகளுள் ஜனநாயகக் கோட்பாடும் ஒன்றாகும். பொதுவாக ஜனநாயகம் என்பது மக்களாட்சியைக் குறிக்கும். மக்களாட்சியை ஆங்கிலத்தில் டெமாக்ரசி (Democracy) என்பர். டெமாக்ரசி என்ற சொல் டெமோஸ் (Demos) கிராட்டோஸ் (Kratos) என்ற இரண்டு சொற்களிலிருந்து தோன்றியது. டெமோஸ் என்பதற்கு மக்கள் என்றும் கிராட்டோஸ் என்பதற்கு அதிகாரம் அல்லது ஆட்சி என்றும் பொருள் கொள்ளப்படும்.

‘மக்களாட்சி என்பது பலருடைய அரசாங்கம்’ என்று கிரேக்க அறிஞர் பிளேட்டோ வரைவிலக்கணப் படுத்தினார் அரிஸ்ரோட்டிஸ், மக்களாட்சி ஏழ்மை நிலையிலுள்ளோர் தங்களுக்காக நடத்தும் ஆட்சி என்று கூறினார். ‘மக்களால் மக்களுக்காக மக்களால் புரியப்படும் ஆட்சி முறையே மக்களாட்சி ஆகும். அதாவது, மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே மக்களாட்சி அரசாகும்.

எனவே, மக்களாட்சி அரசில் மக்களுக்காகவே ஆட்சி மேற்கொள்ளப்படும். - என்று முன்னாள் அமெரிக்க குடியரசின் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தெளிவுபடுத்தினார்.மேலும் அரசியல் அறிஞர் ராபர்ட்டாலின் கருத்துப்படி, ‘சாதாரண மனிதர்களும் அரசியல் தலைவர்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரத்தைப் பெற்றுள்ள ஆட்சி முறை ஜனநாயகமாகும்’. - என்றார்.



தற்போது உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில் இந்த ஆட்சி முறையே நடைமுறையில் உள்ளது. பொதுவாக ஒரு நாட்டின் மக்கள், தங்களின் கருத்துக்களைத் தேர்தலின் மூலம் பதிவுசெய்து, தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தனிக் கட்சியாகவோ அல்லது ஏனைய கட்சிகளுடன் கூட்டணியாகவோ ஆட்சி செய்வர். எனவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்காகவே ஆட்சி செய்ய வேண்டும். மக்களின் தேவை அறிந்து மக்களுக்கு சேவையற்ற வேண்டும்.

ஆகவே, இங்கு மக்கள் பிரதிநிதி என்பவர் மக்கள் சேவகரே. கோட்பாட்டு ரீதியாக விளக்கம் அழகாகக் காணப்பட்டாலும் கூட, ஆட்சிக்கு வரும்வரை மக்கள் சேவகர்களாகக் காட்டிக் கொள்ளும் இவர்கள், ஆட்சிக்கு வந்தவுடன் மாறிவிடுகின்றமை பொதுவாக ஜனநாயக நாடுகளில் காணக்கூடிய நடைமுறை நிலைப்பாடாகும். மக்களை மதிக்காத - கணக்கில் எடுக்காத மனிதர்களாக அவர்கள் மாறிவிடுகின்றனர். இதுதான் இன்றைய கலாசாரம். ஜனநாயகத்தின் அளவைத் தீர்மானிப்பது ‘ஜனநாயக சுட்டெண்’ ஆகும்.

ஜனவரி 2007 இல் ‘தி எக்கொனொமிஸ்ட்’ இதழ் வெளியிட்ட மதிப்பீடுகளின்படி மொத்தமான 10 புள்ளிகளில் 9.5 புள்ளிகளும் புள்ளிகளுக்கு மேலும் பெற்றுள்ள நாடுகள் சிறந்த ஜனநாயக நாடுகளாக இனங்காட்டப்படுகின்றன. மேற்படி புள்ளி விவரத்தின் அடிப்படையில் சுவீடன் 9.88 புள்ளிகளுடன் அதிகூடிய மக்களாட்சிப் பண்பு கொண்ட நாடாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. வட கொரியா 1.03 புள்ளிகளுடன் மிகக் குறைந்த மக்களாட்சிச்சுட்டெண் உடைய நாடாகும்.

ஜனநாயக ஆட்சியில் முக்கிய இரண்டு அம்சங்கள்காணப்படுகின்றன. அவை சமத்துவம், சுதந்திரம் என்பன வாகும்.

ஜனநாயக ஆட்சி முறையில் மக்களுக்குச் சுதந்திரம் இருத்தல் மற்றைய பிரதான பண்பாகும். எவ்வாறாயினும், ஒருவரது சுதந்திரத்தால் இன்னொருவர் சுதந்திரம் பாதிப்படைதல் கூடாது. சுதந்திரத்தைப் பிரதானமாகப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், சமய சுதந்திரம்.

அரசியல் சுதந்திரம் எனும் போது புராதன கிரேக்க ஆட்சிகளைப் போல இன்று நேரடியான மக்களாட்சி முறையைக் காணமுடியாது. எனவே, இன்று காலத்திற்குக் காலம் நடைபெறும் தேர்தல்கள் மூலம் தமது சார்பில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, தமக்கு விருப்பமான அரசைஅமைத்துக் கொள்வதற்கு மக்கள் உரிமை பெற்றுள்ளனர். இது மக்களாட்சி முறையின் மிகவும் சிறப்பானதொரு விடயமாகும்.

எனவேதான் மக்களாட்சியில் அரசியல் சுதந்திரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்தத் தேர்தல்களில் தமது பிரதிநிதிகளைச் சர்வசன வாக்குரிமை மூலம் தெரிவுசெய்து கொள்வதற்குப் பொதுமக்களுக்கு உரிமை உண்டு. தேர்தல் காலங்களில் துண்டுப் பிரசுரங்களை வெளியிடவும், கருத் துக்களைக் கூறவும், அரசியல் கூட்டங் களை நடத்தவும் சுதந்திரம் காணப் படும்.

தேர்தலின்போது அரசியல் கட்சிகள் முன்வைக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கேற்ப (தாம் பதவிக்கு வந்தால் தமது ஆட்சியின்போது எம் முறைகளைப் பின்பற்றுவோம் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த முன்வைக்கும் திட்டம் தேர்தல் விஞ்ஞாபனமாகும்) மக்கள் தாம் விரும்பும் கட்சிக்கு வாக்களிக்கும் சுதந்திரம் காணப்படல் வேண்டும். ஜனநாயகம் எனப்படுவது பெரும்பான்மைக் கருத்தின்படி செயற்படும் ஓர் ஆட்சி முறையாகும்.

அரசாங்கக் கட்சி எதிர்க்கட்சியின் கருத்துக்களைச் செவிமடுப்பதைப் போலவே எதிர்க்கட்சியும் பயனுறுதி வாய்ந்த கருத்துக்களையே முன் வைக்கவேண்டும். அரசாங்கக் கட்சியின் சகல திட்டங்களையும் எதிர்ப்பது தான் எதிர்க்கட்சியின் கடமையாக இருத்தல் கூடாது. மக்களாட்சியில் தீர்மானங்கள் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றனவாயின் மற்றவர்களுடைய கருத்துக்கள், அபிப்பிராயங்கள் முதலியவற்றைச் செவிமடுத்துக் கவனித்துச் செயற்படுதல் அரசாங்கக் கட்சியினதும் எதிர்க்கட்சியினதும் கடப்பாடாகும்.

பொதுவாக மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயகம் விமர்சனங்களுக்கு உற்பட மேற்குறிப்பிட்ட காரணிகளும் ஏதுவாகின்றன. எவ்வாறாயினும் ஜனநாயகம் என்பது கோட்பாட்டு ரீதியில் மிகவும் உயர்வானது.

ஆனால், நடை முறையில் ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்களாலும் மக்களின் அறிவீனம் காரணமாகவும் அது விமர்சனங்களுக்கு உற்படுவதைத் தவிர்க்க முடியாது உள்ளது. உலகளாவிய ரீதியில் 2009 ஆம் ஆண்டு கொண்டாடப் படுவது இரண்டாவது ‘சர்வதேச மக்களாட்சி நாள்’ இந்தத் தினத்தில் ஜனநாயகக் கோட்பாடுகள் பற்றிய எண்ணக் கருக்களை மக்கள் மத்தியில் தீவிரமாக விதைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

★

# தீர்வின்றேல் மின்சாரத்துறை ஸ்தம்பிதமடையும் நிலையில்!

## ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணி எச்சரிக்கை

கொழும்பு, செப். 15

தமது கோரிக்கைகளுக்கு அரசு உரிய தீர்வை முன்வைக்கத் தவறினால் இன்று நண்பகல்முதல் பரந்துபட்ட தொழிற்சங்கப் போராட்டத்தில் மின்சார சபை ஊழியர்கள் இறங்கவுள்ளனர் என இலங்கை ஒன்றிணைந்த தொழிற்சங்க முன்னணியின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

மின்சார சபை ஊழியர்கள் பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் நண்பகல் முதல் தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மின்சார சபை ஊழியர்கள் நீண்ட காலமாக சம்பளப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர். அதற்கு உரிய தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். அத்துடன், மின்சார சபையில் ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுசெய்வதற்கு மின் கட்ட ணத்தில் அதிகரிப்புச் செய்யுமாறு மின்சார சபையின் நிர்வாகத்தால் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

எனினும், மின் கட்டணத்தில் அதிகரிப்புச் செய்யக் கூடாது. ஏனெனில், மின்சார சபையில் இடம்பெறும் ஊழல் மோசடிகளினாலேயே மின் கட்ட ணத்தில் ஐம்பது சதவீத சுமையை பாவனையாளர் கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. ஆகவே, அந்தச் சபைக்குள் நிலவும் மோசடிகளைதடுப்பதுடன் மின் கட்டணத்தில் அதிகரிப்புச் செய்யக் கூடாது.

மேற்சொன்ன பிரதான கோரிக்கைகள் உட்பட இன்னும் சில கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம்.

எனினும், வைத்தியசாலை உட்பட முக்கிய இடங்களில் பணியில் ஈடுபட்டுள்ளோம். இருந்த போதிலும் அரசுக்கு நாம் இன்று நண்பகல் வரை அவகாசம் வழங்குகிறோம். அந்தக் காலக்கெடுவில் எமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். அல்லாது போனால் இன்று நண்பகல் முதல் பரந்துபட்ட தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கவுள்ளோம்.

அந்தப் போராட்டத்திற்கு எதிராக அரசு பிரயோகித்தாலும் எமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிட்டும் வரையில் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

### சூரிய கிரகணத்தாலேயே

# இலங்கையில் சீரற்ற காலநிலை

கொழும்பு, செப். 15

சமீபத்தில் நிகழ்ந்த சூரிய கிரகணம் உலகெங்கும் கால நிலையில் தாக்கத்தைத் தோற்றுவித்துள்ளது என இலங்கையில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானியலாளர் அனுர சீ பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இதனால், இலங்கையிலும் சீரற்ற கால நிலை மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்தும் கனமழை பொழியும் எனவும் மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் 50 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கின் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வளிமண் டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நாட்டின் பல பகுதிகளிலும் மழை பெய்திருந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வலுவான காற்று நிலை காணப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு வெளியிடப்பட்டுள்ள மண் சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்காவின் குகுலே கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளமையினால் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன என்றும் தாழ் நிலப் பகுதியில் வாழும் மக்களை அவதானமாக செயற்படுமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

---

# துறைமுகங்களை விற்பதற்கு அரசு தீர்மானிக்கவில்லை

## அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகிறார்



கொழும்பு, செப். 15

இலங்கையில் உள்ள எந்தத் துறைமுகத்தையும் அரசு விற்பனை செய்யத் தீர்மானிக்கவில்லை என்று மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு எந்தத் துறைமுகத்தையும் குத்தகைக்கும் வழங்க எதிர்பார்க்கவில்லை.

மக்கள் விடுதலை முன்னணி போலியான செய்திகளைப் பரப்ப முயன்றுவருகிறது.

மீனவர்களுக்கு எந்த நெருக்கடியும் ஏற்படாத வகையில் கடற்றொழிலை மேம்படுத்துவதற்கு அரசு உயர்ந்தபட்ச நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதன் மூலம் தேசிய பாதுகாப்பிற்கு எந்த விதத்திலும் அச்சுறுத்தல் ஏற்படாது என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

---

# 'சில்' துணி மோசடி விவகாரத் தீர்ப்பு அரச ஊழியர்களுக்கு சரியான பாடம்!

## கபே அமைப்பு தெரிவிப்பு



சில் துணி மோசடி தீர்ப்பானது அரச ஊழியர்ளுக்கு சரியான பாடம் என கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சார்பான ஒரு தேர்தல் பிரசார நடவடிக்கையாக 50 கோடி ரூபா அரச நிதியை பயன்படுத்தி விகாரைகளுக்கு செல்லும் மக்களுக்கு சில் துணி விநியோகித்தமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தலா மூன்று வருட கடூழிய சிறைத் தண்டனையும், தலா 20 லட்சம் ரூபா அபாரதமும் விதித்துள்ளது.

இந்த நிலையில் கபே அமைப்பு அதனை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தவை வருமாறு:-

மக்களின் பொதுச்சொத்துக்களை தவறான முறையில் பயன்படுத்தியது சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி செயலாளருக்கும் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கும் எதிராக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது, ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் மறக்க முடியாத ஒரு பாடமாக அமையும் என்று கூறியுள்ளார்.

(க)

---

# எஹலியகொடையில் 150 குடும்பங்கள் இடம்பெயர்வு

கொழும்பு, செப். 15

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை காரணமாக வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் எஹலியகொடையில் மண்சரிவு அபாயமுள்ள பிரதேசங்கள் என கட்டட ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்த பகுதிகளில் இருந்து சுமார் 150 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் என எஹலியகொடை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி 150 குடும்பங்களைச் சேர்ந்த 577 பேர் இடம்பெயர்ந்துள்ளதுடன், இவர்கள் பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மாதிங்கொட - 40 பேர், அஸ்கங்குல - 28 பேர், எஹலியகொட தோட்டம் - 48 பேர், விலேகொட - 54 பேர், தொரணகொட - 50 பேர், பெல்பிட்டிய - 146 பேர், போபெத்த - 128 பேர், கலட்டுவாவ- 18 பேர், எருபொல- 65 பேர் எனத் தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு எஹலியகொட பிரதேச செயலகத்தின் மூலமும் நலன்புரி அமைப்புக்களூடாகவும் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அனர்த்த முகாமைத்துவ உதவி அதிகாரி ஜீ.பி.எஸ். அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

# ஒரே நாளில் இருவேறு இடங்களில்

# படகுகள் கவிழ்ந்து விபத்து

லக்னோ.செப்.15

ஒரே நாளில் உ.பி. மற்றும் பீகாரில் படகுகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளான தில் ஆற்றில் மூழ்கி 28 பேர் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத் தியுள்ளது.

உத்தரப்பிரதேசம் மாநிலம் பாக்பத் மாவட்டத்தில் நேற்று 60 பேரை ஏற்றிச் சென்ற படகு யமுனை ஆற்றில் கவிழ்ந்து பயங்கர விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணம் செய்த 22 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

மீட்கப்பட்ட 12 பேர் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காணாமல் போன மீதி பேரை தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வரு கின்றனர். இதனால் சாவு எண்ணிக்கை உயரும் அபாயம் இருப்பதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இதே போன்று பீகாரிலும் நேற்று காலை படகு கவிழ்ந்து விபத்துக் குள்ளானது. பீகாரில் மராஞ்சி பகுதியில் உள்ள கங்கை ஆற்றில் ஏற்பட்ட இந்த





## உ.பி. மற்றும் பீகாரில் 28 பேர் சாவு

விபத்துகளில் 6 பேர் பரிதாபமாக உயிரி ழந்தனர்.ஒரே நாளில் இரு இடங்களில் ஏற்பட்ட படகு விபத்துகளில் 28 பேர் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# திருமண செலவு 11 ரூபாய்!

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பெண்ணை இந்தியர் ஒருவர் வெறும் 11 ரூபாய் செலவில் மிக எளிமையாகத் திருமணம் செய்து கொண்டுள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் பஞ்சாப் மாநி லத்தை சேர்ந்தவர் ஜாஹித் அலி யும், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த நபிசதா ஜாஹித்தும் ஒருசமயம் விமான நிலையத்தில் சந்தித்துக் கொண்ட போது இரு வருக்கும் நட்பு ஏற்பட்டது.

இதன் பின்னர், நபிசதா, ஜாஹித்தை தேடிப் பஞ்சாப் மாநிலத்துக்கு வந்தார், அப்போது இருவருக்கும் இடையில் காதல் மலர்ந்துள்ளது. காதலர்கள் திரும ணம் செய்து கொள்ள முடிவெடுத்த நிலையில், நபிசதா இதுகுறித்து அவர் பெற்றோருக்கு கடிதம் எழு தினார்.

இந்தியரை தனது பெற்றோர் மருமகனாக ஏற்று கொள்வார்களா என நபிசதா கவலைப்பட்ட நிலை



யில், அவர் பெற்றோர் திருமணத் துக்கு சம்மதம் தெரிவித்தனர். இதையடுத்து ஜாஹித்- நபிசதா வின் திருமணம் சில தினங்களுக்கு முன்னர் மிக எளிமையாக வெறும் 11 ரூபாய் செலவில் நடந்தது.

இந்த திருமணத்திற்குத் தலைமை தாங்கிய மத குருவுக்கு 11 ரூபா வழங்கப்பட்டது குறிப் பிடத்தக்கது.

## பள்ளிக்குச் சென்ற 2 மாணவிகள் வன்புணர்ந்து கொலை

உ.பி.யில் பள்ளிக்கு சென்ற 2 மாணவிகள் வன்புணர்ந்து கொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒரு மாணவியின் கதி தெரிய வில்லை. அந்த மாணவியைப் பொலிஸார் தேடிவருகி றார்கள்.

உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி மாணவிகள் 3 பேர் கடந்த திங்கட்கிழமை வீட்டில் இருந்து பள்ளிக்கு புறப்பட்டனர். ஆனால் 3 மாணவிகளும் பள்ளிக்கு செல்ல வில்லை. திடீர் என்று மாயமாகி விட்டார்கள். மாணவிகள் அனை வரும் கிராமப் பகுதியைச் சேர்ந்த வர்கள் என்பதால் யாராவது கடத் திச் சென்றார்களா? என பொலிஸார் பல இடங்களில் தேடி வந்தனர்.

இந்த நிலையில் கான்பூர் அருகே ஈட்டாவா மாவட்டத்தில் சம்பல் பள்ளத்தாக்கு பகுதியில் 2 மாண விகளின் பிணங்கள் மீட்கப்பட்டன. பொலிஸார் அவற்றைப் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத் தனர். அதில் 2 மாணவிகளும் வன்புணர்ந்து கொலை செய்யப் பட்டுஇருக்கின்றமை தெரியவந்தது.


# இந்திய பேரரசுக்கு...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்கள் சத்தமாகப் பேச வேண்டி இருந்தது. திலீப னின் குரலே மாறி கரகரவென இருந்தது.எந்த முடிவும். நல்ல முடிவாக இருக்க வேணும். ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக அவர் கள் எழுத்தில் தர வேணும். இல்லையெண்டால். நான் உண்ணாவிரதத்தைக் கடைசி வரைக்கும் கைவிடமாட்டன். என்றார்.

எட்டாவது நாள் அதிக மக் கள்வந்தமையால் அவர்களின் நிழலுக்காக கொட்டகைகள் போட ஆரம்பித்தார்கள். அந்த நாளகளில் தமிழ் மக்களிடம் அதிக புகழ் பெற்ற மட்டக் களப்பைச் சேர்ந்த இளம் போராளி மதன் திலீபனைப் போல் இரண்டு நாளகளில் தானும் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என அறிவித்தார். தமிழீழத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திலே திருச்செல்வம், என்ற போரா ளியும், அவருடன் சேர்ந்து பலபொது மக்களும், உண்ணா விரதப் போராட்டத்தைத் தொடங்கப் போகிறோம் என அறிவித்தனர். அதைத் தொடர்ந்து ஆயுதப் போராட் டம் பரவியதை விட அதி வேகமாக அஹிம்சைப் போராட் டம் தீயெனப் பரவியது. திலீ பன் எல்லோரின் ஆதர்ச சக் தியாக இருந்தார். அன்று திலீ பனால் பேச முடியவில்லை, நடக்க முடியவில்லை, எழ முடியவில்லை ஆனால், வெகு சுலபத்தில் பல்லாயிரம் பேரை அஹிம்சை வழிக்குத் திருப்பி இருந்தார். அனைத்து யாழ் அரசு அலுவலகங்களையும் மக்கள் முற்றுகையிட்டு மறி யல் செய்தனர்.அனைத்துமே அமைதிவழிப் போராட்டம்.

ஒன்பதாவது நாள் திலீ பனின் உடலில் மெல்லிய உதறல் வர ஆரம்பித்திருந் தது. உதடுகள் பாளம் பாளமாக வெடித்து இருந்தன.காலையி லேயே 5 ஆயிரம் மக்கள் வந்தி ருந்தார்கள். ஆனால் திலீபன் கண்ணைத் திறக்கவில்லை. இந்தியப் படை தென் பிராந் தியத் தளபதி திபேந்தர் சிங் இலங்கை வந்து பிரபாகர னைச் சந்தித்தார். ஒரு மணி நேர பேச்சு தோல்வியில் முடிந்தது. பகல் ஒரு மணிக்கு இரண்டாம் கட்டப் பேச்சு தொடங்கியது.இதில் இந்தியத்



திலீபனுக்கு மிகவும் பிடித்த பாடலான ***ஒ மரணித்த வீரனே! - உன் ஆயுதங்களை எனக்குத் தா. உன் சீருடைகளை எனக்குத் தா ...!*** பாடலை பாடினார்கள். அந்தப் பாடல் நல்லூரில் எட்டுத் திக்கும் எதிரொலித்தது.

தூதுவர் ஜெ.என் .டிக்ஸிற், திபேந்தர் சிங் ,இந்திய தூதர கப் பாதுகாப்பு அதிகாரி குப்தா ஆகியோர் இந்தியாவின் சார் பிலும் விடுதலை புலிகளின் சார்பில் அவ்வியகத்தின் தலை வர் பிரபாகரன் ,தளபதி மாத் தையா,அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், வழக்கறி ஞர் கோடீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.பேச்சு தோல்வியில் முடிந்தது.

பத்தாவது நாள் திலீபனின் உடல் நிலை மிகவும் மோச மாகி விட்டது. மனிதனுக்கு சராசரியாக இருக்க வேண்டிய நாடித் துடிப்பு நிமிடத்திற்கு 72. திலீபனின் நாடித் துடிப்பு நிமிடத்திற்கு 52.சாதாரண ரத்த அழுத்த அளவு (120/80) இருக்க வேண்டும். ஆனால் திலீபனின் நாடித் துடிப்பு (80/50). தனது சக்தி முழுவதையும் திரட்டி திலீபன் இரண்டு வரி பேசினார் நான் இறப்பது நிச்சயம். அப்படி இறந்ததும் வானத்திலிருந்து என் தோழர்களுடன் சேர்ந்து நமது இலட்சியத்திற்காக உழைப்பேன். மக்களின் போராட்டம் அதிகரித்தது பல் வேறு ஊர்களில் மக்கள் அடையாள உண்ணா விரதத் தில் அமர்ந்தார்கள். 6 ஆயிரம் மாணவ மாணவிகள் அழுத கண்களும் சிந்திய மூக்குமாக ஊர்வலமாக வந்து நல்லூர் மைதானத்தை நிறைத்தனர்.

பதினோராவது நாள் உயி ருடன் இருக்கிறாரா இறந்து விட்டாரா என்றே தெரியாத அளவுக்கு இருந்தார் திலீபன். அனிச்சையாக அவரது உடல் அசைவதன் மூலமே அவர் இன்னும் உயிருடன் இருக்கி றார் என்று தெரிந்தது.அவர் செமி கோமா நிலையில் இருந்தார். பெரிய கட்டில் ஒன்றை கொண்டுவந்து அதில் அவரை மாற்றினார்கள். அப்போது தான் அவர் படுக் கையிலேயே சிறுநீர் கழித்தி ருந்ததை பார்த்தார்கள். திலீ பனுக்கு வேறு உடை மாற்றி னார்கள். திலீபனுக்கு மிகவும் பிடித்த ஓ மரணித்த வீரனே! - உன் ஆயுதங்களை எனக்குத் தா. உன் சீருடைகளை எனக் குத் தா ...! என்கிற பாடலைப் பாடினார்கள். அந்தப் பாட லைக் கேட்டுக் கொண்டே கோமா வில் விழுந்தார்.


அந்தஇரவு அழுதுகொண்டே விடிந்தது. தொடர்ந்து இரு நூற்றி அறுபத்தி ஐந்து மணி நேரம் ஒரு சொட்டுத் தண் ணீரும் ஒரு பருக்கை உணவும் இல்லாமல் தனது திடமான கோரிக்கையை மட்டும் நெஞ்சில் வைத்திருந்த வீரன் சரியாக முற்பகல் 10.58 இற்கு வீர மரணம் அடைந்தான். அதிகாரத்துவம் அவனை சாக விட்டுவிட்டது. ஆனால் அதுவே பெரும் கிளர்ச்சியாக உருவெடுத்தது. மீண்டும் அந்த மக்களை ஆயுதம் தங் கிய போராட்டத்திற்கு வழி வகுத்தது. ★

# மலேசியப் பாடசாலை விடுதியில் தீ: மாணவர்கள் உட்பட 25 பேர் சாவு!

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள பாடசாலை ஒன்றின் விடுதியில் நேற்று வியாழக்கிழமை காலை ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில், 25 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் மாணவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை அந்த நாட்டுத் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை என்பன உறுதிப்படுத்தி உள்ளன.





கோலாலம்பூர் ஜாலன் தாடக் கேராமத் என்ற பகுதியில் ‘தாருல் குரான் இட்டிபாகியா’ என்ற பெயரில் மத போதனைப் பாடசாலை ஒன்று இயங்கி வருகின்றது. மேற்படி பாடசாலையிலேயே , நேற்று அதிகாலை சுமார் 5.30 மணியளவில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

இது தொடர்பில் தீயணைப்பு அதிகாரி கிருதின் ரஹ்மான் கூறுகையில், ‘‘கடந்த 20 வருடங்களில் நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான தீ விபத்து இதுதான். தீ விபத்து ஏற்பட்ட காரணம் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.’’ - என்றார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் மலேசியாவின் ஜோகர் மாகாணத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நீண்ட கால்கள்: மொடல் அழகிக்கு கின்னஸ் விருது!



உலகிலேயே மிக நீளமான கால்களைக் கொண்ட மொடல் அழகியான எக்டேரினா லிஷினா கின்னஸ் விருதைப் பெற்றுச் சாதனை படைத் துள்ளார்.

ரஷ்யாவைச் சேர்ந்த மொடல் அழகியான எக்டேரினா லிஷினாவின் (வயது- 29) வலது கால்கள் 132.3 சென்ரி மீற்றர் நீளம் உடையன.இதனால், உலகிலேயே நீளமான கால்களைக் கொண்ட இளம்பெண் என்ற கின்னஸ் விருது அவருக்கு வழங்கப்பட்டது. (ச)

## ரோஹிங்யாக்கள் மீதான தாக்குதலை மியன்மார் உடனே நிறுத்த வேண்டும்!

### வலியுறுத்துகிறார் ஐ.நா. பொதுச்செயலாளர்

நியூயோர்க்,செப்.15

ரோஹிங்யா முஸ்லிம் மக்கள் மீது மியன்மார் அரசு நடத்தி வரும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தவேண்டும்.

-இவ்வாறு ஐ.நா. சபைப் பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் வலியுறுத்தி உள்ளார்.

ரோஹிங்யோ வன்முறை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மியன்மார் அரசு இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி வன்முறைக்கு முடிவு கட்டவேண்டும். மேலும், நாட்டை விட்டுவெளியேறிய அனைவரும் நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். நெருக்கடியின் மூலகாரணங்களை வேரறுக்க ஒரு பய



னுள்ள செயற்றிட்டத்தைக் கையாள வேண்டும். ராக்கின் மாநில முஸ்லிம்களுக்கு நிரந்தர அல்லது தற்காலிகக் குடியுரிமை அளிக்கப்பட்டு, அவர்கள் ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும்.

பல ஆண்டுகளாக நிலவிவந்த இந்தப் பிரச்சினை இப்பொழுது மியன்மாரின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டு நாட்டைச் சீர்குலைத்துவிட்டது. சுமார் 3 லட்சத்து 80 ஆயிரத்துக்கு அதிகமான ரோஹிங்யா மக்கள் பங்களாதேஷுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

இது அந்தப் பகுதியில் ஏற்பட்ட பேரழிவாகும். பொதுமக்கள் மீதான இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்தப் பாதிப்பால் பல பெண்கள் மற்றும் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் உள்ளனர். இவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளைச் செய்ய வேண்டும் என அனைத்து நாடுகளையும் நான் கேட்டுக் கொள்கிறேன். -என்றார். (ச)

## இப்ராஹிமின் சொத்துகள் முடக்கம்!

இந்தியாவைச் சேர்ந்த நிழல் உலகத் தாதா தாவூத் இப்ராஹிமின் சொத்துக்களைப் பிரித்தானிய அதிகாரிகள் முடக்கியுள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்துகொண்டு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு வரும் தாவூத் இப்ராஹிம், மும்பையில் கடந்த 1993 ஆம் ஆண்டு நடந்த தொடர் குண்டுவெடிப்பு தாக்குதல்களுக்கு மூளையாக செயற்பட்டவர் ஆவார். இவரைத் தேடப்பட்டு வரும் சர்வதேசக் குற்றவாளியாக இண்டர்போல் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

ரோஹிங்யாக்களின் அவலத்தைக் கூறும் ஒரு காட்சி



## சிரியாவில் வான் தாக்குதல்: 22 பேர் சாவு!

சிரியாவில் அமெரிக்கா மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் சிக்கி 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரக்கா மற்றும் டெய்ர் அல்-சவ்ர் நகரங்களில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளை இலக்கு வைத்து கடந்த 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் அமெரிக்கா தலைமையிலான கூட்டணி நாடுகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

காலைக்கதிர் Kalaikkathir



# 'யாழின் கில்லாடி' உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

(கங்கா)

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், யாழின் கில்லாடி என்னும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று கடந்த 10 ஆம் திகதி முதல் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 32 உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் ஏ,பி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் 'நொக்கவுட்' முறையில் நடைபெறுகின்றன.

10 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டங்களில், றேஞ்சர்ஸ் அணி 3:1 என்ற கோல்கள் கணக்கில் இருதயராசா விளையாட்டுக்கழகத்தையும், கலைவாணி விளையாட்டுக்கழகம் 4:0 என்ற கோல்கள் கணக்கில் திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தையும், குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல்கள் கணக்கில் ஞானகலா விளையாட்டுக் கழகத்தையும், இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல்கள் கணக்கில் யாழ்ப்பாணம் ஐக்கியம் அணியையும், பாடும்மீன் விளையாட்டுக் கழகம் 5:0 என்ற கோல்கள் கணக்கில் சரஸ்வதி விளையாட்டுக்கழகமும், அரியாலைஐக்கியவிளையாட்டுக்கழகம் 4:2 என்ற கோல்கள் கணக்கில் உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தையும் வீழ்த்தின.









# 4 தங்கம் பெற்று முதலிடத்தில் வித்தியானந்தா கல்லூரி





தேசியரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான குத்துச்சண்டைப் போட்டி முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் வித்தியானந்தக் கல்லூரி 4 தங்கப் பதக்கங்கள் பெற்று முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டது

தேசியரீதியிலான அனைத்துப் பாடசாலைகளுக்கிடையிலானகுத்துசண்டை போட்டி வடமாகாணத்தில் முதன் முதலாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந் த 8ஆம் திகதி தொடங்கி நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தது.

எம்.ஏ.எஸ். நிறுவனத்தின் ஆதரவில் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் நாட்டில் உள்ள 48 பாடசாலைகளைச் சேர்ந்த 240 போட்டியாளர்கள் கலந்து கொண் டனர்.

16 பிரிவுகளைக் கொண்டு நடத்தப்பட்ட இந்தப் போட்டியின் இறுதி போட்டியில் முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி 4 தங்கப் பதக்கங்கள் பெற்று முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (81)

# பேராயர் பொன்சியன் வெற்றிக் கிண்ணம்; சென்.ஜோசப்பை வீழ்த்தியது சென்.பற்றிக்ஸ்

(கங்கா)

ஆட்டத்தில் முழுநேர ஆதிக்க அணியாக மாறிய சென்.பற்றிக்ஸ் அணி 3:0 என்ற கோல்கள் கணக்கில் கொழும்பு சென்.ஜோசப் கல்லூரியை வீழ்த்தியது.

பேராயர் பொன்சியன் ஆண்டகை ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் (புனித பத்திரிசியார் கல்லூரி) கொழும்பு சென். ஜோசப் கல்லூரிக்கும் இடையிலான உதைபந்தாட்ட போட்டி 11 ஆம் திகதி திங்கட்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டி ஆரம்பம் முதல் சென். பற்றிக்ஸ் அணியின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. எதிரணியின் கோல் கம்பங்களை சென். பற்றிக்ஸ் வீரர்கள் ஆக்கிரமித்தனர். அதன் பயனாக 20 ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸ் அணிக்கு பெனால்ட்டி வாய்ப்பொன்று கிடைத்தது. அந்த வாய்ப்பை அணியின் வீரர் டோனால்ட் கமில்ரன் ஹெய்னஸ் கோலாக மாற்றினார்.

அதன் பிறகு சுதாகரித்தாடிய சென்.ஜோசப் அணி, சென்.பற்றிக்ஸ் அணியின் பின்களத்தை அடிக்கடி உடைத்து முன்னேறியது. எனினும், சரியான முடித்தல் இல்லாமல் அவற்றை கோலாக்கத் தவறியது. முதல்பாதியாட்டம் அடிக்கப்பட்ட ஒரு கோலுடன் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தின் ஆட்டம் ஆரம்ப மானதும் ஆரம்பத்தில் சென்.ஜோசப் அணி வேகமாக ஆடியது. எனினும், அது முதல் 15 நிமிடங்களுக்குள் சோர்வடைய, சென்.பற்றிக்ஸ் அணியின் சிறப்பான ஆட்டம் மைதானத்தில் ஆரம்பமாகியது. இரண்டாவது பாதியாட்டத்தின் 32 ஆவது நிமிடத்தில் சென்.பற்றிக்ஸ் அணியின் றஜீவ் குமார் சாந்தன் கோல் ஒன்றைப் பதிவு செய்தார். அதே உற்சாகத்துடன் ஆடிய சென்.பற்றிக்ஸ் அணிக்கு, டோனால்ட் கமில்ரன் ஹெய்னஸ் 36 ஆவது நிமிடத்தில் மேலுமொரு கோலை அடித்தார். முடிவில் சென். பற்றிக்ஸ் அணி 3:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.



# இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழு தலைவராக க்ரேம் லப்ரோய்



இலங்கைக் கிரிக்கெட் சபை க்ரேம் லப்ரோய் தலைமையில் 5 பேர் கொண்ட தெரிவுக் குழுவை நியமிப்பதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ளது. இதன் போது வெற்றிடமாகியுள்ள சனத் ஜயசூரியவின் தெரிவுக்குழுத் தலைவர் பதவிக்கு லப்ரோய் நியமிக்கப்படவுள்ளமையுடன் இம்மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் பாகிஸ்தான் அணிக்கெதிராக விளையாடவுள்ள இலங்கை டெஸ்ட் குழாமின் இறுதித் தெரிவை அவரே மேற்கொள்ள உள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நடந்து முடிந்த இந்திய அணிக்கு எதிரான அனைத்து விதமான போட்டிகளிலும் 9:0 என்ற கணக்கில் சொந்த மண்ணில் இலங்கை மோசமாகத் தோல்வியடைந்ததை அடுத்து சனத் ஜயசூரிய தலைமையிலான இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழு பதவி விலகியது.

இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் அணிக்கு எதிராக 2 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 3 ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளது. இறுதி ரி-20 போட்டி லாஹூர் கடாபி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான லப்ரோய், 1986 – 1992 காலப்பகுதியில் இலங்கை அணியைப் பிரதிநிதித்துவப் படுத்தி 9 டெஸ்ட் மற்றும் 44 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். தற்பொழுது சர்வதேச கிரிக்கெட் சபையின் ஆசிய பிராந்தியத்திற்கான போட்டி மத்தியஸ்தராகசெயற்பட்டுவருகிறார். இலங்கை தேர்வுக்குழுத் தலைவர் பதவியை பெற்றுக்கொள்ள அவர் தனது போட்டி மத்தியஸ்தர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்வுக் குழுவிற்கு அனுபவம் வாய்ந்த கிரிக்கெட் பயிற்றுவிப்பாளரும் நிர்வாகியுமான ஜயந்த செனவிரத்ன மற்றும் முன்னாள் டெஸ்ட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மலிந்த வர்ணபுர ஆகியோர் புதிதாகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர், முன்னாள் தேர்வுக்குழு உறுப்பினர்களான எரிக் உபாந்த மற்றும் ரஞ்சித் மதுருசிங்ஹ ஆகியோரின் பெயர்களும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

# ஐந்தாவது ஆசிய உள்ளக மெய்வன்மை விளையாட்டு விழாவில் 21 இலங்கையர்கள்

## துர்க்மெனிஸ்தானுக்கு இன்று புறப்பாடு

ஐந்தாவது ஆசிய உள்ளக மெய்வன்மை மற்றும் தற்காப்புக் கலை விளையாட்டு விழா இம்மாதம் 17ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை முதற்தடவையாக மத்திய ஆசிய நாடான துர்க்மெனிஸ்தானில் நடைபெறவுள்ளது.

45 ஆசிய நாடுகள் உள்ளடங்கலாக 65 ஆசிய, பசுபிக் நாடுகளைச் சேர்ந்த சுமார் 6,000 வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளும் இப்போட்டித் தொடர், துர்க்மெனிஸ்தானின் தலைநகர் அஸ்கபாத்தில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 21 வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமார் 21 விளையாட்டுகளை உள்ளடக்கியதாக நடைபெறவுள்ள இவ்விளையாட்டு விழாவில் பளுதூக்கல், டைகொண்டோ, குத்துச்சண்டை, செஸ் மற்றும் மெய்வன்மை ஆகிய 5 வகையான விளையாட்டுகளில் இலங்கை வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். இந்த நிலையில் 5ஆவது ஆசிய உள்ளக மெய்வன்மை மற்றும் தற்காப்புக் கலை விளையாட்டு விழாவில் பங்கேற்கவுள்ள இலங்கை குழாம், இன்று துர்க்மெனிஸ்தான் நோக்கி பயணமாகவுள்ளதாக தேசிய ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது.

ஆசிய உள்ளக மெய்வன்மை விளையாட்டு விழா முதற்தடவையாக 2005ஆம் ஆண்டு தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெற்றது. 2007ஆம் ஆண்டு மக்காவு இராச்சியத்திலும், பின்னர் 2009ஆம் ஆண்டு வியட்நாமிலும் இடம்பெற்றது. எனினும், 2013ஆம் ஆண்டு தென் கொரியாவில் நடைபெற்ற இப்போட்டித் தொடர் ஆசிய உள்ளக மெய்வன்மை மற்றும் தற்காப்புக் கலை விளையாட்டு விழா என பெயர் மாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடைபெற்ற ஆசிய உள்ளக மெய்வன்மை மற்றும் தற்காப்புக் கலை விளையாட்டு விழாவில் இலங்கை அணி எந்தவொரு தங்கப் பதக்கத்தையும் வென்றிருக்கவில்லை. எனினும், இதுவரை நடைபெற்ற போட்டிகளில் 3 வெள்ளிப் பதக்கங்களையும், 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளது.




**இலங்கை அணி விவரம்**

**பளுதூக்கல்**

கே.டிஎகொடவத்த(56 கிலோ கிராம்), எஸ்.எஸ்.பி விஜேசூரிய (62 கிலோ கிராம்), பீ.யூ சாரக(105 கிலோ கிராம்), என். தயான்(பயிற்றுவிப்பாளர்)

**குத்துச்சண்டை**

சீ.டி பெர்னாந்து(57 கிலோ.கிராம்), சி.எச்.பெரேரா(65 கிலோ கிராம்), டீ.கே.எம்.மதுரங்க(74 கிலோ கிராம்), என்.கருணாசேன(48 கிலோ கிராம்), எம்.டி.எஸ்.மதுஷானி(52 கிலோ. கிராம்), டீ.டீ.கே வீரபாகு(58 கிலோ கிராம்), என்.கே.ஜே பிரியந்த (பயிற்றுவிப்பாளர்)

**தைக்கொண்டோ**

டீ.பி.கே அநுர பண்டார(54 கிலோ கிராம்), எல்.சி சம்பத் லியனகே(57 கிலோ கிராம்), எம்.கே.ரொமேஷ் (பயிற்சியாளர்)

**மெய்வன்மை**

ஹிமாஷ ஏஷான்(60 மீற்றர்), இதுனில் ஹேரன்(800 மீற்றர்), மஞ்சுள குமார(உயரம் பாய்தல்), அமில ஜயசேகர(நீளம் பாய்தல்), கயன்திகா அபேரத்ன(800 மீற்றர்), விதூஷா லக்ஷானி(முப்பாய்ச்சல்), சஜித் ஜயலால்(பயிற்றுவிப்பாளர்)

**செஸ்**

ரஜின்ந்திர சேனக களுகம்பிடிய, ரொமேஷ் சந்த்ர வீரவர்தன, மொஹமட் செளம்யா சைனப், தனுஷி ஹங்சிகா மற்றும் புத்திய நிருக்ஷ

# பல கோடி ரூபா விளம்பர ஒப்பந்தத்தை கொள்கைக்காக நிராகரித்த கோஹ்லி

பலகோடி ரூபா பெறுமான குளிர்பான விளம்பர ஒப்பந்தத்தை விராட் கோஹ்லி வேண்டாம் என்று மறுத்துள்ளார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் இந்தத் தகவலை உறுதி செய்த போது, காற்றடைக்கப்பட்ட எந்த ஒரு குளிர்பானத்தையும் தான் அருந்துவதில்லை என்ற காரணத்தினால் இந்த வாய்ப்பைத் தாம் மறுத்தார் என அவர் தெரிவித்தார்.

கோஹ்லி கடைபிடிக்கும் கொள்கைக்கு இது சற்றும் பிசகாமல் உள்ளது. அதாவது தான்எதைமற்றவர்களுக்குக்கூறுகிறோமோ அதைநாம்முதலில்கடைபிடிக்கவேண்டும் என்ற கொள்கைதான் அது.

அவரே ஒருமுறை நிருபர் ஒருவரிடம் கூறும்போது, தன்னால் செய்ய முடியாத ஒன்றைத் தன் அணி வீரர்களிடம் தாம் வலியுறுத்த மாட்டார் என்றார்.

முதலில் ஒன்றை நான் செய்ய முடியும் என்பதை உறுதிப் படுத்திக் கொண்ட பிறகே சகவீரர்களை அதைச்செய்யுமாறுகூறுவேன் என்று கூறியிருந்தார் விராட் கோஹ்லி.

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாக தேசிய பாட்மிண்டன் பயிற்சியாளர் பி.கோபிசந்த் இதே போன்ற ஒரு கொள்கையின் அடிப்படையில் மிகப்பெரிய தொகைக்கான விளம்பர ஒப்பந்தத்தைத் துறந்தார்.

அதாவது தான் குளிர்பானம் எதையும் அருந்துவதில்லை என்பதால் அடுத்தவர் பயன்படுத்த பெரிய தொகையைப் பெற்றுக் கொண்டு விளம்பரம் செய்வது நியாயமல்ல என்று கோபிசந்த் கருதினார்.

சாய்னா நெவால், சிந்து, காஷ்யப் ஆகியோரிடம் குளிர்பான விளம்பர ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டாம் என்று தான் ஒருபோதும் கூறியதில்லை, அது அவர் களது தனிப்பட்ட விருப்பத் தெரிவு என்று கூறிய கோபிசந்த், காற்றடைக்கப்பட்ட குளிர்பானம் அருந்த வேண்டாம் என்று அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் தாம் எடுத்துரைத்தார் எனக் கூறினார்.

தற்செயலாக, ஒத்த சிந்தனை படைத்த



விராட் கோஹ்லியும் கோபிசந்தும் சமீபத்தில் ஆண்டு விளையாட்டு விருதுகளை சேர்ந்து அறிமுகம் செய்தது குறிப்பிடத்தக்கது.

## 3 மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறப்படுகின்றது.

அதனால் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இந்த மாகாண சபைகளுக்கான தேர்தலுக்குரிய அறிவிப்பை தேர்தல் ஆணைய கம் விடுக்கும் எனத் தெரிகின்றது.

அரசின் உத்தேச இருபதாவது அரசமைப்புத் திருத்த ஏற்பாடு களின்படி –

இந்த மூன்று மாகாண சபைகளின் பதவிக் காலமும் சரி யாக ஒரு வருடத்துக்கு நீடிக் கப்படும். அப்போது அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் ஒரே சமயத்தில் – ஒரே நாளில் – நடத்தப்படும்.

ஆனால் உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் அந்த இருபதாவது திருத்த முயற்சி தடைப்பட்டு கைவிடப்படும் நிலைமை ஏற்பட் டுள்ளது.

எனவே, இந்த மூன்று மாகாண சபைகளின் பதவிக் காலத்தை ஒரு வருடம் நீடிக்கும் எத்தனமும் அதனுடன் செயலிழக்க, இந்த சபைகளுக்கான தேர்தல்கள் உடனடியாக நடைபெறும் சாத்தி யம் ஏற்பட்டுள்ளது. (உ)

## 20ஆவது..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம நீதியரசர் பிரசாத் டெப், நீதியரசர்கள் அனில் குணரத்ன, விஜித் மலலகொட ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த இருப தாவது திருத்தம் தொடர்பிலான விசாரணைகளை நடத்தி வந்தது.

இந்தத் திருத்தத்துக்கு எதிராக பன்னிரண்டு மனுக்கள் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டிருந்தன.

அவற்றின் மீதான விசாரணை கள் நேற்று முன்தினம் முடிவுற் றமையை அடுத்து, இந்தத் திருத் தம் தொடர்பில் தனது அவதா னிப்புகள், பரிந்துரைகள் அடங்கிய தீர்ப்பை நீதிமன்றம், அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய நேற்றே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சபாநாயகர் கருஜெயசூரிய ஆகியோருக்கு அனுப்பிவைத்தது என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

ஜனாதிபதி இந்தத் தீர்ப்பின் உள்ளடக்கத்தைப் பரிசீலித்தாரா?, அரசின் அடுத்த நடவடிக்கை என்ன?, தீர்ப்பின் விவரம் பிரதமர் உட்பட அரசின் ஏனைய தரப்பி னருக்குத் தெரிய வந்துள்ளதா என்பவை குறித்து அறிய முடிய வில்லை.

பெரும்பாலும், தீர்ப்பின் விவ ரத்தை ஜனாதிபதி தரப்பு இன்று பிரதமருக்கும் ஏனைய அரசு தலைவர்களுக்கும் தெரியப்படுத் தக் கூடும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

அரசமைப்புத் திருத்தம் எதுவாயினும் அது குறித்து உயர் நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டும் என்பதும் –

அரசமைப்பின் விசேடமான – பிரத்தியேகமான – அடிப்படை ஷரத்துக்களை மீறும் அம்சங்கள் அத்தகைய திருத்தத்தில் உள்ளன என உயர்நீதிமன்றம் கருதும் பட்சத்தில் அத்தகைய திருத்தங்கள் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கினரின் பெரும் பான்மை ஆதரவுடனும், சர்வஜன வாக் கெடுப்பு (அல்லது மக்கள் தீர்ப்பு) ஒன்றின் மூலம் மக்களின் அனு மதியுடனுமே நிறைவேற்றப்பட முடியும் என உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்யலாம் என்பதும் – தெரிந்தவையே.

இது தொடர்பான ஏற்பாடுகள் தற்போதைய அரசமைப்பில் தெளி வாக வரையறுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையிலேயே இரு பதாவது திருத்தம் குறித்துப் பரி சீலனை செய்த உயர்நீதிமன்றம் தனது பரிந்துரையை இப்போது சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்திருக்கின்றது. (உ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவது திருத்தச் சட்டத்தை கண் மூடித்தனமாக எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லை. இருந்தும் ஏதற்காக எதிர்க்கிறார்கள் என்பதை என்னால் அறிய இயலவில்லை எனவும் கூறியிருக்கிறார்.

20 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக நேற்று யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறி யவை வருமாறு:–

20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக பல கருத்துக்கள் கூறப்பட்டு கொண்டிருக்கின்றன. ஆனால் மேற்படி 20 ஆவது திருத்தச் சட்டம் சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரு தினத்தில் நடத்துவதற்கு வழி செய்யும் ஒரு சட்டமூலம். இதில் மாகாண சபைகள் கலைக் கப்பட்டால் ஒரு திகதியில் தேர் தலை நடத்த வேண்டும் எனவும், 5 வருடங்களுக்கு முன் மாகாண சபை கலைக்கப்பட்டால் அந்த மாகாண சபையின் அதிகாரங் களை எஞ்சிய காலத்துக்கு நாடாளுமன்றம் பெற்றுக் கொள் ளும் எனவும் கூறப்பட்டிருக்கும் இரு விடயங்கள் மட்டுமே குறை பாடாக இருக்கின்றன. அவையும் திருத்தப்படும் என உயர்நீதிம ன்றில் கூறப்பட்டுள்ளதாக அறி யக் கிடைக்கின்றன. ஆனால் உத்தியோகபூர்வமாக எவையும் வெளியாக வில்லை. இவ்வாறான நிலையில் மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படும் என கூறப்பட்டு கொண்டிருக்கின்றது. அதில் உண்மையில்லை. மாகாண சபைகளுக்கான தேர் தலை ஒரு தினத்தில் நடத்துவ தற்கான திருத் தச்சட்டமே இது.

மாகாண சபை களுக்கு அதி காரங்கள்– குறிப்பாக 35 விட யங்களில் தனிச் சிறப்பு அதிகாரங் கள் – வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை இந்தத் திருத்தச் சட்டத்தினால் பறிக்க இயலாது. எனவே மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படும் என கூறி 20 ஆவது திருத்தச்சட் டத்தைக் கண்மூடித்தனமாக எதிர்க்க வேண்டிய – விமர்சிக்க வேண்டிய – அவசியம் இல்லை. அது மட்டுமல்லாமல், 20 ஆவது திருத்தச் சட்டம் ஒரு போதும் மாகாண சபைகளின் அதிகாரங் களைப் பறிக்காது, பாதிக்காது என்பதை உறுதிபடக்கூற இயலும். – என்றார்.

## தரப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ வரன், 20 ஆவது திருத்தச் சட் டத்தை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஆதரிக்கும் நிலைப் பாட்டை எடுத்துள்ளமை தொடர் பாக எதனையும் கூறவில்லை.

20 ஆவது திருத்தச் சட்டத்தில் சில திருத்தங்களைத் தாம் கேட் டிருந்த நிலையில், உயர்நீதிமன் றில் அது தொடர்பான வழக்கில் அந்தத் திருத்தங்கள் இடம் பெற் றுள்ளமையால் 20 ஆவது திருத் தச் சட்டத்தை நாம் ஆதரிப்போம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பின ரும், கட்சியின் ஊடகப் பேச்சாள ருமான எம்.ஏ.சுமந்திரன் கூறி யிருந்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக நேற்று முதலமைச்சர் சி.வீ.விக் னேஸ்வரனிடம் ஊடகவியலாளர் கள் எழுப்பிய கேள்விக்குப் பதி லளிக்கும் போதே முதலமைச்சர் மேற் கண்டவாறு கூறினார். எனி னும் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக அவர் கருத்து எதனை யும் கூறாமல் மௌனம் சாதித் தார். ஊடகவியலாளர்களின் கேள்விக்கு முதலமைச்சர் பதில் கூறுகையில் –

20 ஆவது திருத்தச்சட்டத்தை இப்போதுள்ள நிலையில் எதிர்ப் பது என்ற தீர்மானத்தை நாங் கள் எடுத்திருக்கிறோம். அந்தத் தீர்மானத்தை எடுக்கும்போதே 20 ஆவது திருத்தச் சட்டத்தில் நாங்கள் கேட்கும் திருத்தங்கள் இடம்பெறுமாக இருந்தால் அதனைப் பரிசீலிக்கலாம் எனக் கூறியிருந்தோம்.

அந்தவகையில் திருத்தங் கள் செய்யப்பட்டு மீண்டும் எங் களுக்கு வழங்கப்படுமாக இருந் தால், அதனை நாங்கள் நிச்சய மாகப் பரிசீலிப்போம். மேலும் கிழக்கு மாகாண சபையில் 20 ஆவது திருத்தச் சட்டத்தை ஆத ரிக்கும் தீர்மானத்தை எடுத்தி ருக்கின்றார்கள்.

20 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன எனத் தாங்கள் அறிந்து அதனை ஆதரிக்கிறார்கள் என அவர்கள் கூறுகிறார்கள். அதனை நான் ஊடகங்கள் வாயிலாக அறிந்தி ருக்கிறேன். முழுமையாக அது தொடர்பாக எனக்கு எந்த ஒரு விடயமும் தெரியாது. ஆனால் 20 ஆவது திருத்தச்சட்டத்தில் நாங்கள் கேட்கும் திருத்தங்கள் செய்யப்பட்டு உத்தியோகபூர்வ மாக எமக்கு அனுப்பி வைக்கப் படவில்லை. – என்றார்.

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் கவுன்ஸி லுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி அரசுத் தலைமை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூட்டமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்த குற்றச்சாட்டு களுக்குப் பொறுப்புக் கூறலை உறுதிசெய்ய நம்பகமான நடவடிக்கைகளை இலங்கை எடுக்காதது, சர்வதேச சட்ட நட வடிக்கைகளுக்கு இன்னும் அவசி யத்தை ஏற்படுத்தியுள்ளது" என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் செயிட் அல் ஹுசைன், 36 ஆவது கூட்டத்தொடரின் ஆரம்ப உரையில் கூறியிருந் தார்.

இது தொடர்பாக, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நிலைப் பாட்டை வெளிப்படுத்தியுள்ள அந்தக் கட்சியின் ஊடகப் பேச் சாளர் எம்.ஏ.சுமந்திரன் –

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர் பில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மா னத்தை இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றியிருந்தது. அந்தப் பரிந்துரைகளை நிறைவேற்று வதற்கு தமக்கு இரண்டு வருட கால அவகாசத்தையும் கேட்டு வாங்கிக்கொண்டனர். 2019ஆம் ஆண்டுக்குள் அனைத்துப் பரிந் துரைகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது.

வாக்குறுதிகளை நிறை வேற்றுவதற்குப் பதிலாக அரசுத் தலைமை, விதண்டாவாதக் கதை களை கதைத்து வருகின்றது. வழங்கிய வாக்குறுதிகளை நிறை வேற்றுமாறுதான் இலங்கை அரசை நாம் கோருகின்றோம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் விடுத்த இறுதி எச்சரிக் கையை மனதிலிருத்தியாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கை அரசு தற்போதுள்ள மந்தப் போக்கில் தொடர்வது மாபெரும் தவறு – என்று குறிப் பிட்டுள்ளார்.

## தமிழரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழக சட்டத் துறையின் சமகால சட்ட விடயங் களுக்கான அரங்கம் நேற்றுப் பிற்பகல் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்தில் இந்தக் கலந் தாய்வை ஏற்பாடு செய்திருந்தது.

"கூட்டாட்சி பிரிவினை அல்ல; சந்திரசோம எதிர் மாவை சேனாதி ராசா எனும் வழக்கில் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை ஆய்ந்தறி தல்" – என்ற தலைப்பில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் செயலாளர் நாயகமாக இருந்த மாவை சேனாதிராசா வுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட அந்த வழக்கில் மாவை சேனாதி ராசாவின் சட்டத்தரணியாக வாதா டிய எம்.ஏ.சுமந்திரன் இந்நிகழ் வில் உரையாற்றினார்.

அதன் பின்னர் யாழ். பல் கலைக் கழக சட்டத்துறைத் தலை வர் கு.குருபரனின் நெறிப்படுத் தலில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

அந்த உரையில் சுமந்திரன் எம்.பி. மேலும் கூறியவை வரு மாறு:–

இந்த வழக்கில் சமஷ்டி முறைக் கோரிக்கை பிரிவினை அல்ல என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித் தது. அதுவல்ல அந்தத் தீர்ப்பின் முக்கிய விடயம். சமஷ்டி முறை பிரிவினை அல்ல என்பதும் எல்

பக்கம் 03

## இருபதாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பு வந்துவிட்டதால் –

இன்னும் பதினைந்து நாள் களில் அறிவிக்கப்படவிருக்கும் மூன்று மாகாண சபைகளுக் கான தேர்தல் பிரகடனங்களை தேர்தல் ஆணையம் விடுப்பதை அரசினால் தடுக்கவே முடியாது என அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

மூன்று மாகாண சபைகளுக் கான தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், அனைத்து மாகாண சபைகளுக் குமான தேர்தல்களை ஒரே நாளில் நடத்தும் தற்போதைய திட்டம் செயலிழந்து போகும் என் றும் சுட்டிக்காட்டப்பட்டது.

உயர்நீதிமன்றத்தைத் திருப் திப்படுத்தும் விதத்தில் – சர்வஜன வாக்கெடுப்பின்றி இந்தத் திருத் தத்தை முன்னெடுக்கக்கூடிய தாக – இந்தத் திருத்தத்தில் இனி மேல் மாற்றங்களைப் புதிதாகக் கொண்டு வந்து, அதனை உயர் நீதிமன்றத்திடம் சமர்ப்பித்து, அனுமதி பெறுவது குறித்து ஆலோசிக்கப்படலாம்.

ஆனால் அப்படி ஆலோசித்து, அதற்கு வாய்ப்புகளுமிருக்கு மானால், அந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்குக் கால அவ காசம் போதாது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அத்தகைய முயற்சியை முன்னெடுத்து, உயர்நீதிமன்ற அனுமதியைப் பெறுவதற்கு முன்னர் மூன்று மாகாண சபை களுக்கான தேர்தல் செயற்பாடு கள் ஆரம்பமாகிவிடும் என்பதால், அந்த முயற்சியில் பயனில்லை என்கின்றன அந்த வட்டாரங்கள்.

இந்தத் திருத்தத்துக்காக பெரு மெடுப்பில் நாடு முழுவதிலும் ஒரு சர்வஜன வாக்கொடுப்பை நடத்த அரசு முன்வராது என்றும் –

அப்படி ஓர் அமிலச் சோத னையை, தேர்தல் ஒன்றை எதிர் பார்த்துக் காத்திருக்கும் கூட்டு எதிரணியின் கடுமையான அரசியல் எதிர்ப்புக்கு மத்தியில் முன்னெடுக்கும் திராணி நல்லாட்சி அரசுக்கு இல்லை என்றும் –

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. உ

## நீர்க்காகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோகபூர்வ இல்லத்திலிருந்து செய்மதித் தொழில் நுட்பத்தின் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பார்வையிட்டார்.

இந்தக் கூட்டுப் போர்ப் பயிற்சித் திட்டத்தில் ஈடுபடும் உள்நாட்டு, வெளிநாட்டுப் படைகளின் உறுப்பினர்களுக்கு தமது வாழ்த் துக்களை அவர் தெரிவித்தார்.

எட்டாவது தடவையாக இலங்கை இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும் இந்த கூட் டுப் படைப் பயிற்சியில் 13 நாடு களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இராணுவத்தினர் பங்குபற்றுகின் றனர். கடந்த மூன்றாம் திகதி இந்த நடவடிக்கை ஆரம்பமா னது. (உ)

## கடுமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபர்களுக்கு பிணை கோரி விண்ணப்பம் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது.

அதன்போது சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத் தரணி , கடந்த 11 மாத காலமாக விளக்கமறியலில் சந்தேக நபர் கள் தடுத்து வைக்கப்பட்டு உள் ளமையை சுட்டிக்காட்டி, தகுந்த நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட வேண்டும் என மன் றில் பிணை விண்ணப்பம் செய் தார்.

கடும் நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்குவதற்குத் தமக்கு ஆட்சேபனை இல்லை என அரச சட்டவாதி மன்றில் தெரிவித்தமையை அடுத்து மன் றினால் பிணை வழங்கப்பட்டது. இந்த சந்தேக நபர்கள் ஐவரும் தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதி யான ஆள் பிணையிலும், தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசு பிணையிலும் செல்ல மன் றினால் அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 09 மணி முதல் மதியம் 12 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத் திற்குச் சென்று கையொப்பம் இட வேண்டும், வெளிநாடுகளுக்கு செல்வதற்கு தடை , கடவுச்சீட்டை நீதிவான் நீதிமன்ற பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.குளப்பிட்டி சந்திக்கு அரு கில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர் கள் இருவர் மீது யாழ்.பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டதில், இரு மாணவர்களும் கொல்லப்பட்டனர்.

யாழ்.பல்கலைகழக அரசறி வியல் துறை மாணவனான கிளி நொச்சியைச் சேர்ந்த நடராஜா கஜன் (வயது23) மற்றும் ஊடகத் துறை மாணவனான சுன்னா கத்தைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது 24) ஆகிய இருவருமே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகொலை செய் யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் – பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் சரத்திஸ்ஸ மற்றும் கான்ஸ்டபிள்களான ஜெயவர்த்தன, சந்தன, லங்கா மல், நவரத்தின ஆகிய ஐந்து பொலிஸார் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கே தற்போது பிணை வழங்கப்பட்டுள்ளது. (உ)

# மருத்துவர்களின் பணிப்பகிஷ்கரிப்பால் உருவெடுத்துள்ள பெரும் ஆபத்து!

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கிறார்

கொழும்பு, செப். 15

மருத்துவர்களது பணிப் புறக்கணிப்புகள் காரணமாக நோயாளர்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருகின்றமை பெரிய ஆபத்தாக உருவெடுத்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மருத்துவ சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் அரசு இழுத்தடிக்கும் போக்குடன் செயற்படாது, பிரச்சினைகளை உரிய முறையில் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்றைய தினம் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 12ஆம் திகதி வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் 09 மாவட்டங்களில் மருத்துவர்கள் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன், இந்த நடவடிக்கைகள் ஏனைய மாவட்டங்களில் நேற்று முன்தினமும் நேற்றும் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிய வருகின்றது.

மருத்துவர்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு இல்லையெனில் மேற்படி பணிப் பகிஷ்கரிப்பு ஒன்றிணைந்த பணிப் பகிஷ்கரிப்பாக தொடரும் அபாயம் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் மற்றும் ஏனைய ஆளணியினருக்கான பற்றாக்குறைகள் பலவருடகாலமாகத் தொடர்கின்ற நிலையில், நோயாளர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இத்தகைய பணிப் பகிஷ்கரிப்புகள் மேலும் அவர்களை கடுமையான பாதிப்புகளுக்கு உட்படுத்தி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதேநிலை நாட்டில் பெரும்பாலான பகுதிகளிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



தொடரும் மருத்துவர்களது பணிப் பகிஷ்கரிப்புகளை முடிவுக்குக் கொண்டுவர அரசால் இதுவரையில் இயலாதிருப்பது கேள்விக்குரிய விடயமாகியுள்ளது. இது மக்களிடையே பெரும் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளது.

மருத்துவர்களது பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கென பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ள நிலையிலும், அக்குழு தொடர்பில் மருத்துவத் தரப்பினர் அதிருப்திகளை வெளியிட்டு வருகின்ற ஒரு நிலையே காணப்படுகின்றது.

மருத்துவர்களது பிரச்சினைகளுள் பிரதான பிரச்சினையாக காணப்படுகின்ற மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டங்களில் மருத்துவத்துறை மாணவர்களும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், அவர்களது கற்கை செயற்பாடுகள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றன.

இன்று எமது நாட்டில் மருத்துவர்களுக்கு பெரிய பற்றாக்குறைகள் நிலவும் நிலையில், நாளைய மருத்துவர்களாக மாற வேண்டிய இந்த மாணவர்களது கற்கை செயற்பாடுகளும் பாதிக்கப்படுமானால், எமது நாட்டின் எதிர்கால மருத்துவத்துறை பெரிய சவாலுக்கு உட்படுத்தப்படுவது நிச்சயமாகும்.

அதேநேரம், எமது நாட்டில் மருத்துவத்துறையில் கற்கைகளை மேற்கொண்டு வருகின்ற வெளிநாட்டு மாணவர்களை அந்த நாடுகள் திருப்பி அழைக்கின்ற நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது.

எனவே, தற்போதைய இந்த நெருக்கடியான நிலையை அவதானத்தில் கொண்டு, அரசு உடனடி, நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை எட்ட வேண்டுமென குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## யோகாப் பயிற்சி பெற்ற ஆசிரியருக்கு சான்றிதழ்

வடமராட்சி, செப்.15

புற்றளை சித்தி விநாயகர் ஆலய யோகா பாடசாலையில் யோகாசனப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புற்றளை மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் பிரதம விருந்தினராகவும், வைத்திய கலாநிதி திருமதி ப.முல்லைசிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(இ)

## ஜீ.எஸ்.பி. பிளஸ் மீளாய்வு அறிக்கை ஜனவரி மாதத்தில் வெளியிடப்படும்!

கொழும்பு, செப். 15

ஸ்ரீலங்காவிற்கு வழங்கப்படும் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை தொடர்பான மீளாய்வு அறிக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையை ஐரோப்பிய நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரவை என்பன ஆய்விற்குட்படுத்தும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 10 பேரைக் கொண்ட குழு இலங்கையிலிருந்து ஆய்வுகளை நடத்தி குறித்த அறிக்கைக்கான தகவல்களை வழங்கியுள்ளதாக ஸ்ரீலங்கா மற்றும் மாலைதீவிற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதரகம் தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசின் நடவடிக்கைகள் குறித்து பாராட்டியுள்ள அந்தக் குழு மறுசீரமைக்கப்பட வேண்டிய பல துறைகள்இலங்கையில்இருக்கின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

(க)

# ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்தக்கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

மியன்மார் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்தக் கோரி கொழும்பு நகர மண்டப பகுதியில் தவ்ஹீத் ஜமாத் மாபெரும் பேரணியை நடத்தியுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மருதானை, கோட்டை பகுதிகளில் பிரதான வீதியின் பொதுப்போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மியன்மார் (ரோஹிங்யா) முஸ்லிம்களுக்கு எதிராக மியன்மார் இராணுவம் மற்றும் கடும்போக்கு இயக்கங்கள் தொடர்ந்து நடத்திவரும் கொடூர தாக்குதல்களினால் இதுவரை சிறுவர்கள், பெண்கள், முதியோர் என ஆயிரக் கணக்கானோர் கொலை செய்யப்பட்டு, லட்சக் கணக்கானோர் கடும் காயங்களுக்கு உள்ளாகி, இருப்பிடங்களை இழந்து நாட்டை விட்டே வெளியேறும் அவல நிலை அங்கு உருவாகியுள்ளது.



தொடர் தாக்குதல்களால் நாட்டைவிட்டே வெளியேறும் பலர் கடலில் மூழ்கி மரணிக்கும் சம்பவங்கள் தொடர்கதையாகியுள்ளன.

இந்த நிலையில், மீண்டும் மியன்மார் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் உச்ச நிலையை அடைந்துள்ளன. இந்தத் தாக்குதல் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. குறைந்த பட்சம் கண்டனத்தைக் கூட முறைப்படி வெளியிடாமல் இருப்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

அத்துடன், சமாதானத்திற்கான நோபல் பரிசு வென்ற மியன்மாரின் ஆங்சாங் சூகியின் மேற்பார்வையில் ஆட்சி நடந்து வரும் நிலையில் எந்த நாட்டில் தான் மனித உரிமை மீறல்கள் நடைபெறவில்லை? என்று ஆங்சாங் சூகி ஏளனமாக தெரிவித்திருக்கின்றமை கடும் கண்டனத்திற்குரியதாகும்.

மியன்மார் நாட்டுடன் நெருங்கிய நட்புக்கொண்ட நாடாக இருக்கும் இலங்கை, மியன்மார் முஸ்லிம்களுக்கு எதிரானஇனப்படுகொலைக்கு எதிராக அந்நாட்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இலங்கை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் அரசுக்கு அழுத்தம் தெரிவிக்க வேண்டும்.

இதேவேளை, மனித நேயமற்ற இக்கொடூரத் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டு வரும் விதமாக உடனடி அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என்பதை உணர்ந்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் உடனடி முயற்சிகளை எடுக்க வேண்டும் என தவ்ஹீத் ஜமாத் தெரிவித்துக் கொள்கிறது.

# யாழ். இந்து - ஆனந்தாக் கல்லூரி மாபெரும் கிரிக்கெட் இன்றும் நாளையும்

## யாழ். இந்துக் கல்லூரி அணி வீரர்கள்


பி.கஜந்தன் (தலைவர்)


எஸ்.சிவலக்ஷன் (உப தலைவர்)


இ.பரிமலன்


எம்.கோபிராம்


ஜீ.சந்தோஷ்


என்.ஜங்கரன்


எஸ்.அங்கவன்


எஸ்.சந்துரு


யு.மிலக்ஷன்


கே.பிரகலாதன்


எஸ்.தனுஷ்ரன்


யு.கேதீஸ்


பி.தனுஷன்


கே.நிகேஷ்

## ஆனந்தாக் கல்லூரி அணி வீரர்கள்


ஏ.சிகிர


டி.ரிஸான்


ஜீ.எதிரிசிங்க


எச்.ஷமிக


ஐ.ரணதுங்க


கே.ரந்திலககே


கே.ஜிம்கனா


எல்.ஹிரண்யா


எல்.அமரசேகரா


கே.விஜேசிறி


எஸ்.ஹிருஷன்



எஸ்.தஸநாயக்க


ஆர்.தயாரட்ண


என்.நெத்மின

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கும் இடையிலான ஆறாவது மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் (மருத்துவ பீட நுழைவாயில்) நடைபெறவிருக்கின்றது.

அதேசமயம் இரண்டு பாடசாலைகளிலும் ஆங்கில விவாத அணிகளுக்கு இடையிலான நான்காவது வருடாந்த விவாதச் சமர் நாளை காலை 9.30 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் இடம்பெறும். (உ)




# லலித் வீரதுங்க, அனுஷ பல்பிட்டவுக்கு பிணை வழங்குவது தொடர்பில் நீதிமன்று ஆராய்வு

## சட்டமா அதிபர் கருத்துக் கோரப்பட்டுள்ளது

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்கு படுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பல்பிட்ட ஆகியோரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணை மனு சம்பந்தமாக விளக்கமளிக்குமாறு சட்ட மா அதிபருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 20ஆம் திகதி இது தொடர்பில் நீதிமன்றத்தில் விளக்கமளிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜிஹான் குலதுங்க சட்டமா அதிபருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இந்த இருவர் மீதான தண்டனைக்கு எதிராக மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

இதன் காரணமாக அந்த மேன்முறையீட்டுவழக்குவிசாரணைகள்நிறைவடைந்து தீர்ப்பு வரும் வரை இருவருக்கும் பிணை வழங்குமாறு அவர்கள் சார்பான சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கேட்டுக் கொண்டார்.

முன் வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்ட நீதிபதி, அவர்கள் இருவருக்கும் பிணை வழங்குவது சம்பந்தமாக சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை எதிர்வரும் 20ஆம் திகதி நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு குறிப்பிட்டு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு முற்பகுதியில் தொலைத் தொடர்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமான அறுபது கோடி ரூபாவை பயன்படுத்தி சில் துணிகளை முறையற்ற விதத்தில் விநியோகம் செய்தனர் என இவர்களுக்கு எதிரா குற்றம்சுமத் தப்பட்டிருந்தது. அதன்படி, இந்த வழக்கில் இவர்களைக் குற்றவாளிகள் என நீதிமன்றம் அடையாளப்படுத்தி, இருவருக்கும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்பது தெரிந்ததே.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.